In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓ

ஶிவமயம்

அருள் நூல்களில் ஆகமங்கள்

(பன்னிரு திருமுறைகள், திருப்புகழ், ஸ்ரீதாயுமானசுவாமிகள் பாடல்கள்,
ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் பாடல்கள்
ஆகியவற்றில் காணப்படும் சிவ ஆகமக் குறிப்புகள்)

G.கார்த்திகேய சிவம்

திருப்பரங்குன்றம்
2022

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓ

ஶிவமயம்

தென்சேரிமலை குருத்துவம், செட்டிபாளையம்

சிவஶ்ரீ ஆலாஹல சந்த்ரசேகர சிவாசார்யார்-ஶ்ரீமதீ சாரதாம்பாள்

தம்பதிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஸிவமயம்

அருள்நூல்களில் ஆகமங்கள்

(பன்னிரு திருமுறைகள், திருப்புகழ், ஸ்ரீதாயுமானசுவாமிகள் பாடல்கள், ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் பாடல்கள் ஆகியவற்றில் காணப்படும் சிவ ஆகமக் குறிப்புகள்)

G. கார்த்திகேய சிவம்

திருப்பரங்குன்றம்.

2022

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல் விளக்கக் குறிப்பு

நூல்	அருள்நூல்களில் ஆகமங்கள்
பொருள்	திருமுறைகள் முதலான அருள்நூல்களில் காணப்படும் ஆகமக் குறிப்புகள்
ஆசிரியர்	சிவஸ்ரீ க. கார்த்திகேய சிவம், திருப்பரங்குன்றம்.
பார்வையாளர்	ஸாஹித்ய சிரோமணி சிவஸ்ரீ வை. வேதாரண்யேச்வர சிவம், திருப்புனவாசல்
தாள்	மேப்லித்தோ இயற்கை வண்ணம் 80GSM
மொழி	தமிழ்
எழுத்து	தமிழ்
முதல் பதிப்பு	20.05.2022
பக்கங்கள்	18+62 =80
ப்ரதிகள்	1500
எழுத்து, அளவு	12
ஒளி அச்சு	G. கார்த்திகேய சிவம், திருப்பரங்குன்றம்.
அட்டை	ஸ்ரீஸ்வாமிநாதன் ஹைலைட் கிராபிக்ஸ், மதுரை.
அச்சிடல்	ஸ்ரீஹரீஷ் ப்ரிண்டர்ஸ், சென்னை.
வெளியீடு	சிவஸ்ரீ ச. உமாபதி சிவாசார்யார், செட்டிபாளையம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவகுஹமயம்

ஸ்ரீமந்த்ராசலமூர்த்தி துணை

ஆறு முகத்தின் அதிபதி தான் என்றும்
கூறு சமயக் குருபரன் தான் என்றும்
தேறினர் தேறுத் திருவம் பலத்துள்ளே
வேறின்றி அண்ணல் விளங்கிநின் றானே

–பொற்றில்லைக்கூத்து, திருமந்திரம், திருமூலர் பெருமான்

பதிப்புரை

ஸ்ரீஷடானன பரமேச்வரராக விளங்குபவரும் எங்கள் குல ஆத்மார்த்தமூர்த்தியாக உதித்தவருமான எல்லாம்வல்ல தென்சேரிமலை ஸ்ரீமந்த்ராசல ஷண்முகக் கடவுள் அருளால் திருப்பரங்குன்றம் ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலய ஆகம அத்யாபகர் 'சிவாகம பாஸ்கர' 'சிவாகம கலாநிதி' 'முனைவர்' சிவஸ்ரீ க. கார்த்திகேய சிவம் அவர்கள் எழுதிய "அருள்நூல்களில் ஆகமங்கள்" என்னும் நூலைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது, திருவருளால் நிகழ்ந்தது என்றே கூறலாம்.

இந்நூல் சமயாசார்யப் பெருமக்கள் முதல் பல அருளாளர்களால் அருளப்பட்ட பன்னிருதிருமுறைகள் முதலான அருள்நூல்களில் காணப்படும் ஆகமச் சொல்லாட்சி, ஆகமம் தொடர்பான விஷயங்கள், ஆகமத்திற்கான வேறுபெயர்கள், நான்மறைப் பெருமை ஆகிய விஷயங்களை நமக்கு நன்கு விளக்குகிறது.

திருமுறைகள் சிவ ஆகமப் பொருள் வழுவாது உயிர் மூச்சாகக் கொண்டிருப்பதை இந்நூலில் காணமுடிகிறது.

தெய்வத்தமிழாம் திருமுறைகளை அருள்நூல்கள் என ஆசிரியர் கொண்டாடுவது ஆசிரியருக்கு திருமுறைகள் மீதும் தமிழ் மொழியின் மீதும் இருக்கும் அன்பை வெளிப்படுத்துகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவத்தின் முதல்நூல்கள் வேத–சிவாகமங்கள் என்ற கருத்தைத் திருமுறைகளின் வாயிலாக நிறுவியிருப்பது இக்காலத்தில் வாழ்கின்ற சைவப்பெருமக்களுக்குச் செய்த பெரும் தொண்டாகும்.

பூசலார் நாயனார் ஆலயம் எழுப்பும்போது அவர் "மனத்தாலும் சிவாகம விரோதமாகச் செய்யவில்லை" என்ற கருத்தின் மூலமாக மெய்யடியார்கள் சிவப்பரம்பொருளின் வாக்காகிய சிவாகமங்களின்மேல் கொண்ட பேரன்பை அறிய முடிகிறது.

வேத–சிவாகமங்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் சைவரே இல்லை என்ற கருத்தை அருளாளர்களின் வாக்குகளின் வழியாக தெள்ளத்தெளிவாக விளக்குகிறார் ஆசிரியர்.

சிவாகமங்களின் ஸாரமாக விளங்கக்கூடிய அருள் நூல்களிலும் நான்குநெறிகள் ஆகமத்தை அடிப்படையாகக் கொண்டு பேசப்படுவதை இந்நூலில் காணமுடிகிறது.

சித்தாந்த சாஸ்த்ரங்களைக் கற்றும் வேத–சிவாகமங்களுக்கு முரணாகப் பேசுபவர்களை எண்ணி வியந்தும், மெய்ப்பொருளை உணர்த்தியும், கடந்தும் செல்லும் மாண்பு போற்றத்தக்கது.

"வேத–சிவாகமங்களுக்குள் பேதமில்லை" என்ற ஸ்ரீதாயுமான சுவாமிகளின் உறுதிப்பாட்டை உணர்ந்தால், சைவம் மொழிக்கு அப்பாற்பட்டது என்பதை உணரமுடியும் என்பது விளங்குகிறது.

அத்வசுத்தி (தீக்ஷை) எனும் ஞானச்சடங்கை மிக அழகாக எடுத்துரைக்கும்போது, திருவடிதீக்ஷை என்ற பெயரில் தற்காலத்தில் செய்யப்படும் ஆடம்பரப் போலிச் சடங்குகளை அடையாளம் காட்டும் ஆசிரியரின் ஞானம் நன்கு தெரிகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவனால் மட்டுமே முழுமையாக அறிந்துகொள்ளக் கூடிய சிவாகமங்களை, முழுமையாகப் படித்துவிட்டேன் என்று கூறிக்கொண்டிருக்கும் போலிகளுக்கு, திருப்புகழ் மூலம் பணிவு, தன்னடக்கம் ஆகியவற்றுடன் கூடிய வேத–சிவாகமநெறியே சைவநெறி என்று காட்டியிருக்கிறார் ஆசிரியர்.

எங்களுடைய வழிபடு கடவுளான கந்தக்கடவுளை ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் தமது கந்தர் கலி வெண்பாவில் ஸ்ரீமந் மகுடோத்தரம் என்ற ஆகமத்தின் அடிப்படையில் ஷடத்வ–வடிவினனாக வர்ணித்திருப்பது கனவிலும் நனவிலும் மறக்கமுடியாத ஒன்று.

இவ்வளவு சிறப்புப் பெற்ற இந்நூலை மெய்யன்பர்கள் படிக்கவேண்டும், எல்லோருக்கும் கொண்டு சேர்க்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கும் ஆசிரியர், சைவத் தொண்டுக்கு சிறந்த உதாரணமாகத் திகழ்கிறார்.

மொழி அபிமானத்தினாலும், இன அபிமானத்தினாலும், உணர்ச்சிக்கு அடிமைகளாக்கப்பட்டிருக்கின்றவர்களும், வேத–சிவாகமங்களை மறந்தும், இகழ்ந்தும் மொழியின் பெயரால் சைவ சமயத்திற்கு ஊறுவிளைவிக்கும் போலிச் சைவர்கள்கூட இந்நூலை வாசித்தால் உண்மை நெறியினை உணர்ந்து கொள்வார்கள் என்பது திண்ணம்.

இவ்வளவு நூல்களையும் ஆராய்ந்து விஷயங்களைத் தொகுத்து அனைத்து சைவ மெய்யன்பர்களுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற ஆசிரியரின் சைவத் தொண்டை ஒவ்வொரு சைவ மெய்யன்பரும் போற்றவேண்டியது கடமையாகும்.

இது இக்காலத்திற்குத் தேவையான மிக முக்கியமான நூல் ஆகும். இக்காலத்தில் வெளிவருவது ஈசன் சித்தமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அற்புதமான இந்நூலை எனது புதல்வன் சிவாகம வித்யாநிதி சிவஸ்ரீ உ மந்த்ரகிரி செந்தில்நாத சிவம் M.A., M.Phil, (Saivagama) ஸௌபாக்யவதீ த. அர்த்தசிவாம்பா (எ) சிவகாமீ M.A (Eng) ஆகியோரின் திருமணவைபவத்தில் வெளியிடவேண்டும் என்ற எங்களது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, இந்நூலை எங்களுக்காகச் செய்து கொடுத்த ஆசிரியர் சிவஸ்ரீ கார்த்திகேய சிவாசார்யார் அவர்களுக்கு எங்களது பலகோடி நன்றிகள்.

எங்கள் இல்லத் திருமணவிழாவில் இந்நூலை வெளியிடுவதை சைவசமயத்திற்குச் செய்யக்கூடிய மிகச் சிறிய தொண்டாக நாங்கள் கருதுகிறோம்.

ஆசிரியர் அவர்கள் இதுபோல இன்னும் பலநூல்களைத் தொகுத்து உலகுக்கு வழங்கும் சைவப்பணியை மேன்மேலும் தொடர்ந்து செய்யவும், அனைத்து உயிர்களுக்குள்ளும் நிறைந்தவரான ஸ்ரீமந்த்ராசலமூர்த்தியின் திருவடிகளை மனம், மொழி, மெய்களால் வணங்குகிறோம்.

இந்நூலை வெளியிட உதவிய எனது மகள்கள் – மருமகன்கள் சிவஸ்ரீ சிவராஜ செந்தில் பிரபு – ஸ்ரீமதீ மீனாக்ஷீ சந்த்ரவித்யா, சிவஸ்ரீ D. தியாகராஜ சிவம் (எ) சங்கர் சிவம் – ஸ்ரீமதீ சாரதா பைரவீ அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துகளையும் உரித்தாக்குகிறோம்.

சைவ மெய்யன்பர்கள் அனைவரும் "ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான்" திருவடிஞானத்தை அடைய வேண்டுகிறோம்.

இப்படிக்கு

ச. உமாபதி குருக்கள்

குருத்வஸ்தானிகர்,

ஸ்ரீமந்த்ரகிரிவேலாயுத ஸ்வாமி திருக்கோயில், தென்சேரிமலை.

பரம்பரை ஸ்தானிகம் மற்றும் அறங்காவலர்,

ஸ்ரீநல்லவிநாயகர் காசிவிச்வநாத ஸ்வாமி திருக்கோயில்,

செட்டிபாளையம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீ குருப்யோ நம:
சந்தன் பாதம் கனவிலும் நுணை செய்யும்

சிவாகம சிரோமணி, சிவாகம கலாநிதி

சிவஸ்ரீ S.K. ராஜா பட்டர் (எ) சந்த்ரசேகர பட்டர்

ஸ்தானிகர், அருள்மிகு ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்
அர்ச்சகர், அருள்மிகு மீனாக்ஷி – ஸுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
முதல்வர், ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம்.

திருச்சிற்றம்பலம்

மெய்த்த ஆகம விதி வழி வேத காரணரை
நித்தல் பூசனை புரிந்து எழு நியமமும் செய்தே
அத்தர் அன்பருக்கு அமுது செய்விப்பது முதலா
எத் திறத்தன பணிகளும் ஏற்று எதிர் செய்வார்.

– சேக்கிழார் பெருமான், பெரியபுராணம்

வாழ்த்துரை

தென்சேரிமலை குருத்வஸ்தானிகர் அன்பிற்கினிய சிவஸ்ரீ ச. உமாபதி சிவாசார்யார் அவரது புதல்வன் சிவாகம வித்யாநிதி சிரஞ்ஜீவி உ. மந்த்ரகிரி செந்தில்நாத சிவம் – ஸ்ரீமதீ த. அர்த்தசிவாம்பா (எ) சிவகாமீ ஆகியோரின் திருமண நன்னாளில் "அருள்நூல்களில் ஆகமங்கள்" என்ற நூலை வெளியிடுவதை அறிந்து மகிழ்கிறோம்.

வேத–சிவாகம நெறியே சைவநெறி என்ற உண்மையை அறியாத மக்களிடத்தில் போலியாக ஒரு வழியை ஏற்படுத்திப் பரப்பிவரும் போலிகளால் நிறைந்த இக்காலத்தில், உண்மையை அறிய விரும்பும் மக்களுக்கு இந்நூல் பெரிதும் உதவும்.

தம்பதிகள் மண்ணில்நல்லவண்ணம் வாழவும், நூல் வெளியீடு சிறக்கவும் ஆலவாயதனில் வீற்றிருந்தருளும் நமது வழிபடுகடவுளாகிய அருள்மிகு அங்கயற்கண்ணி உடனமர் ஆலவாயண்ணல் சொக்கநாதப் பெருமானின் திருவடி மலர்களையும், திருப்பரங்கிரிதனில் கோயில் கொண்டருளும் தெய்வானை மணாளன் முருகப்பெருமானின் இணையடி மலர்களையும் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

பேரன்புடன்

K. ராஜா பட்டர்

திருப்பரங்குன்றம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி மாலா
சிவாகம விசாரத – சிவாகம பிரவீண – சிவாகம ஞானதிலகம்
சிவஸ்ரீ.அவிநாசி.எஸ்.சுந்தரமூர்த்தி சிவாச்சாரியார்
முதல்வர் – முதல் ஸ்தானிகர்
அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயில், அவிநாசி
முதல்வர், வேத ஆகம சம்ஸ்கிருத மஹா பாடசாலை, ஸ்ரீ ஸ்ரீ குருகுலம்,
வேத விற்கான மஹா வித்யா பீடம்,சர்வதேச வாழும் கலை மையம், பெங்களூரு.
A.S.Sundara Murthy Sivam.
PRINCIPAL VEDA AGAMA SAMSKRUTHA MAHA PATASHALA, THE ART OF LIVING INTERNATIONAL CENTRE,
SRI SRI GURUKULAM, 21st Km, KANAKAPURA ROAD, UTTARAHALLI, BENGALURU - 560 082
Contact: 080 67252851, 9008499933, E-Mail: srivigurukulinfo@gmail.com/ asmsivam206@gmail.com

உ

ஸ்ரீ குருப்யோ நம:

அருள்நூல்களில் ஆகமங்கள்

வாழ்த்துரை

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சோடு இருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத்தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே.

– திருமந்திரம்–ஆகமச்சிறப்பு

எல்லாம் வல்ல உமையொருபாகனால் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருளப்பட்ட நூல்கள் சிவாகமங்கள். அவை சரியை, க்ரியை, யோகம், ஞானம் என நான்கு பாதங்களில் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களை விளக்குகின்றன.

இவ்வாகமங்கள் இறைவனால் அருளப்பெற்று, அம்பிகைக்கு உபதேசிக்கப்பட்டு, நமது ஆதிசைவர்களால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. वेदागमौ मया प्रोक्तौ लोकसृष्टेः पुरा शिवे என்று இறைவன் பார்வதியிடம் உலகம் தோன்றும் முன்னரே வேதங்களும், சிவாகமங்களும் என்னால் அருளப்பட்டன என்று கூறுகிறார். இதனையறிந்த சிவனடியார்கள் இறைவனிடம் தாங்கள் அருளிய வேத–சிவாகமங்களுடைய பொருளை நாங்கள் அறிய அருள வேண்டுமெனக் கேட்க, வேண்டமுழுதும் தருபவனாகிய இறைவன் வேத–சிவாகமங்களுடைய கருத்தை எளிமையாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எல்லோரும் அறிந்துகொள்ள ஆசார்ய மூர்த்திகளை அருளியுள்ளார். அவர்களின் மூலம் வெளிவந்தனவே பன்னிரண்டு திருமுறைகளாகும்.

முதல் ஏழு திருமுறைகள் தேவாரங்கள் என்று கூறப்படும். அதனை தேவாரம், வேதசாரம் என்று கூறப்படுகிறது. எட்டாம் திருமுறை திருவாசகம். அதில் "ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" என்று கூறுவதாலும் ஆகமத்தின் கருத்துக்களைக் கூறுவதாகவுள்ளது. ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, தோத்திரக் கருத்துக்களைக் கூறுவதாகவுள்ளது. பத்தாம் திருமுறை திருமந்திரம், மந்த்ர சாஸ்திரங்கள், யந்திர முறைகளை விளக்குவதாக உள்ளது. பதினோராந்திருமுறை பன்னிரண்டாந்திருமுறை, வழிபாட்டு முறைகளை விளக்குவதாக அமைந்துள்ளன. இந்த கருத்தினையெல்லாம் ஒருங்கிணைத்து "அருள் நூல்களில் ஆகமங்கள்" என்ற புத்தகத்தை வெளியிடுவது குறித்து மிக்க மகிழ்ச்சியாக உள்ளது.

இந்த புத்தகத்தில் பலகட்டுரைகளைத் தொகுத்து வெளியீடு செய்யும் திருப்பரங்குன்றம் க. கார்த்திகேய சிவாசார்யார் மற்றும் உதவி புரிந்தவர்களுக்கு வாழ்த்துக்களை அன்புடன் உரித்தாக்குகிறேன்.

நன்றி – வணக்கம்

இப்படிக்கு

அவிநாசி. எஸ். சுந்தரமூர்த்தி சிவாசார்யார்

முதல்வர், வேத ஆகம ஸம்ஸ்க்ருத மஹா பாடசாலை,

பெங்களூர், கர்நாடகா – 560 082.

சுபக்ருத் வருடம்,

சித்திரை – 27

10.05.2022

செவ்வாய்க்கிழமை

‼ மேன்மை கொள் சைவநீதி ‼

‼ விளங்குக உலகமெல்லாம் ‼

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலு மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள ன்னங்கள் சோதி
மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கண் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே.

– திருஞானசம்பந்தப் பெருமான்

முன்னுரை

எந்தவொரு சமயமாக இருந்தாலும் அந்த சமயத்திற்கு என்று மூலநூல்களாகச் சிலவற்றைக் குறிப்பிடுவார்கள். நம் பாரத மணித்திருநாட்டிலே இருக்கின்ற நாஸ்திக மதங்கள் தவிர்த்த பிற மதங்கள் அனைத்திற்கும் வேதங்கள்–தாம் மூலநூல்கள் என்பது நிதர்சனமான உண்மை.

நாமெல்லாம் சைவர்கள். வைதிகசைவர்கள். எித்தாந்த சைவர்கள். சிவபெருமானை முழுமுதற் கடவுளாகப் போற்றி வழிபடுபவர்கள். சிவபெருமானே நம்முடைய வாழ்க்கையின் குறிக்கோள். அந்தப்பெருமானை அடைவதற்கு நமக்கென்று ஒரு வழி வேண்டும். அந்த வழி செம்மையான வழியாக இருக்க வேண்டும். பயணப்படும்போது நம்முடைய பயணத்திற்கு இடையூறுகள் ஏற்படாதவாறு அந்த வழி அமையவேண்டும்.

எப்பொழுது அந்த வழி அவ்வாறு சுலபமாக இருக்குமென்றால் இலக்கை அடைந்தவர்களால் காட்டப்பட்ட வழியும், பல்லாயிரம் ஆண்டுகள் பல்லாயிரக்கணக்கான சான்றோர்கள் பயணப்பட்ட வழியும் செம்மையாக இருக்கும். அப்பொழுதுதான் அதற்கு வழி என்றே பெயர் அமையும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நம்முடைய சைவசமயம் சிவபெருமானாலேயே அருளிச் செய்யப்பட்டது. உயிர்கள் தன்னை அடையும் வழியையும் சிவபெருமானே அருளிச் செய்திருக்கிறார். உலகத்து உயிர்கள் யாவும் தன்னை வந்து அடைய வேண்டும் என்ற பெருங்கருணையோடுதான் பெருமான் இந்தப் பிரபஞ்சத்தையே படைத்திருக்கிறார்.

ஆணவ மலத்தினில் அமிழ்ந்திய பசுக்களை
அனாரதம் தன்னகத்தே ஐக்கியம் கோடற்கு
அருந்தொழில்கள் ஐந்து நனி ஆற்றும் ஐம்முகன்
ஆகி நீ மானுடன் நவின்ற நல் ஆகமம்.

– பாம்பன் சுவாமிகள்

என பாம்பன் சுவாமிகள், பெருமான் நம்மையெல்லாம் தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத் தான் வேதாகமங்களை அருளியிருக்கிறார் என்று கூறுகிறார்.

பல நூறு ஆண்டுகளாக நாம் அந்நியர்களுடைய ஆட்சியிலே சிறைபட்டுக் கிடந்திருக்கின்றோம். அந்தக் காலக் கட்டங்களிலே நமக்கு முறையான வழிகாட்டுதலைச் செய்வதற்குக் கூடத் திராணியற்றவர்களாக முன்னோர்கள் இருந்திருக்கிறார்கள். அக்காலத்தில் இருந்த பிரச்சினைகளுக்கு இடையில் இந்த அளவு சமயத்தைக் கொண்டு சேர்த்ததே அவர்கள் செய்த பெரியபணியாகத் தோன்றுகிறது.

முறையான வழிகாட்டுதல் நமக்குக் கிடைக்காததால் இன்று பல்வேறு விதமான இன்னல்கள் நமக்குத் தோன்றியிருக்கின்றன. ஆனாலும் எப்பேர்ப்பட்ட இன்னல்கள் வந்தாலும் அதையெல்லாம் சுக்குநூறாக ஆக்கக்கூடிய வல்லமை படைத்தவர் நம் பெருமான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சத்தியம் என்றும் அழியவே அழியாது. உண்மை என்றும் அழியவே அழியாது. அழிக்கவும் முடியாது.

பொய், தான் பொய் என்பதை ஒருநாள் நிச்சயம் காட்டிவிடும்.

இந்நிலையில் நம்முடைய கடமை என்ன இருக்கிறது என்று சொன்னால் நம் மக்களுக்கு நம்முடைய சமய நூல்கள் என்பவை எவை, அவை எந்த மொழியிலே அமைந்திருக்கின்றன. அந்த மொழி நமக்குத் தெரியாவிட்டாலும் கூட அதன்மேல் நமக்கு ஒரு மதிப்பு வேண்டும். அந்த மொழியைப் பயில்வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும் என்பது போன்ற தகவல்களையெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டிய பொறுப்பில் நாம் இருக்கிறோம்.

சைவர்களாகிய நமக்குப் பிரமாணமாக அமைந்த நூல்கள் பல: வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்று பல நூல்கள் உண்டு. என்றாலும் மூலநூல்களாக விளங்கக் கூடியவை இரண்டு. அவை வேதங்களும் சிவாகமங்களும்.

'வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்' – என்று திருமூலர் பெருமான் அழகாக அருளியிருக்கிறார்கள். இவற்றை யெல்லாம் நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டுமா? நமக்கு என்று தனி சுதந்திரம் கிடையாதா? ஏன் நமக்குப் பிடித்த நூலைக் கைக்கொண்டு பெருமானை அடையமுடியாதா? என்றால் கண்டிப்பாக அடையலாம். தவறே இல்லை. எனக்கு வேதங்கள் தேவையில்லை, ஆகமங்கள் தேவையில்லை, வடமொழி தேவையில்லை நான் சிவபெருமானை அடையமுடியுமா? முடியாதா? என்றால் முடியும். ஆனால் அப்படி இருப்பவர்கள் சைவர்களாகக் கருதப்படமாட்டார்கள்.

எப்பொழுது ஒரு மனிதன் தன்னைச் சைவம் என்ற மதத்திற்குள் அடையாளப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று விரும்புகிறானோ அப்பொழுது அந்த மதத்திற்குரிய சட்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திட்டங்களைக் கைக்கொண்டே ஆகவேண்டும். ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

இந்திய நாட்டின் குடிமகனாக ஆக விரும்புபவர்கள் இந்திய நாட்டின் சட்டதிட்டங்களுக்கு எவ்வாறு கட்டுப்பட்டு நடக்க வேண்டுமோ, அதுபோல, தன்னைச் சைவன் என்று பறைசாற்றிக் கொள்ளவிரும்பும் ஒருவன் வேதங்களையும் சிவாகமங்களையும் இகழ்ந்தால் அவன் சைவனாகவே ஆகமாட்டான்.

"வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்" என்று தேற்றேகாரம் கொடுத்துச் சொல்லியிருக்கிறார் அருள்நந்தி சிவாசார்ய சுவாமிகள். அந்த சிவாகமங்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய காரணம் என்ன என்றால், நம்முடைய அருளாளர் பெருமக்கள் நம் தாய்மொழியிலே நம் பெருமானது அருளாலே அருளிய திருமுறைகளிலே ஆகமங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திருமுறைகளில் ஆகமங்கள் பற்றிய கருத்துகள் காணப்படுகின்றன. எனவே நாம் அவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டிய கடமைப்பட்டவர்கள்.

அவ்வருளாளர் பெருமக்களின் அருள்வாக்குகள் ஆகமங்களைப் பற்றி என்ன கூறுகின்றன என்பது தான் அருள் நூல்களில் ஆகமங்கள் என்ற இந்த நூலில் விளக்கப்பட்டுள்ளது.

இந்நூலைத் தமது திருமணவிழாவில் வெளியிடும் தென்சேரிமலை சிவாகம வித்யாநிதி சிரஞ்ஜீவி உ மந்த்ரகிரி செந்தில்நாத சிவம் – ஸ்ரீமதீ த. அர்த்தசிவாம்பா (எ) சிவகாமி தம்பதிகளுக்கு எனது பரிபூரண நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படியொரு நூல் இக்காலத்தில் அவசியம் வெளிவர வேண்டும் என்று சொல்லி திருமணவிழாவில் மணமகனை இப்பணியில் பணித்த மணமகனது பெற்றோர் தென்சேரிமலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவஸ்ரீ ஆ. ச. உமாபதி சிவாசார்யார் – ஸ்ரீமதீ உ_ லலிதா பரமேச்வரீ தம்பதிகளுக்கு எனது நமஸ்காரங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளியீட்டுப்பணியில் பல்வேறுநிலைகளில் உதவிய சிவன்மலை சிவாகம பாஸ்கர சிவஸ்ரீ ஸே. சிவராஜ செந்தில் பிரபு சிவம் –ஸௌபாக்யவதீ மீனாக்ஷீ சந்தரவித்யா, திருப்பூர் சிவாகம பாஸ்கர சிவஸ்ரீ த. தியாகராஜ சிவம் என்ற சங்கர் சிவம், – ஸௌபாக்யவதீ சாரதா பைரவீ தம்பதிகளுக்கும் எனது பரிபூரண நல்வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலை நல்லமுறையில் அச்சிட்டுத் தந்த சென்னை ஹரீஷ் ப்ரிண்டர்ஸ் ஸ்ரீ ராமசந்த்ரன் அவர்களுக்கும், அட்டைப்படத்தை அழகாக வடிவமைத்துக்கொடுத்த தேனி ஸ்ரீ ஸுந்தரராஜன் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவபெருமானது திருவடிகளிலும், சிவபெருமான் அடியார்களது திருவடிகளிலும், சிவபெருமான் அருளிச்செய்த அருள் நூல்களாகிய வேத–சிவ ஆகமங்களிலும், பெருமான் அருள்பெற்ற அருளாளர்களின் அருள்வாக்குகளிலும் மாறாத அன்பும், திடபக்தியும், அசையாத நம்பிக்கையும் கொண்ட அடியார் பெருமக்கள் இந்நூலை நன்கு பயின்று உண்மையினை உணர்ந்து, பிறர்க்கும் உணர்த்துமாறு வணங்கி வேண்டுகிறேன்.

ஹரநம: பார்வதீ பதயே! ஹர ஹர மஹாதேவ!

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

"பழைய வைதிக சைவம் பரக்கவே"

பேரன்புடன்

சிவசரண–கமலைக–ஸரண்யன்

க. கார்த்திகேய சிவம்

திருப்பரங்குன்றம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஆகமங்களைப் போற்றும் அருட்பாக்கள்

வரந்தையான் சோபுரத்தான் மந்திரத்தான் தந்திரத்தான்
கிரந்தையான் கோவணத்தான் கிண்கிணியான் கையதோர்
சிரந்தையான் செங்காட்டங் குடியான்செஞ் சடைச்சேரும்
கரந்தையான் வெண்ணீற்றான் கணபதீச் சரத்தானே. 3

– திருச்செங்காட்டங்குடி. முதல் திருமுறை

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

– திருஆலவாய். இரண்டாம் திருமுறை

தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர்பொழிற் கூக மேவினான்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவன் உறைவிடம் திருவிற் கோலமே. 6

– திருவிற்கோலம். மூன்றாம் திருமுறை

இந்திரன் பிரம னங்கி யெண்வகை வசுக்க ளோடு
மந்திர மறைய தோதி வானவர் வணங்கி வாழ்த்தத்
தந்திர மறியாத் தக்கன் வேள்வியைத் தகர்த்த ஞான்று
சந்திரற் கருள்செய் தாருஞ் சாய்க்காடு மேவி னாரே.

– திருச்சாய்க்காடு. நான்காம் திருமுறை

துணையிலாமையில் தூங்கிருட் பேய்களோடு
அணையலாவது எமக்கு அரிதே எனா
இணையிலா விடை மாமரு தில் எழு
பணையில் ஆகமம் சொல்லும் தன் பாங்கிக்கே.

– திருவிடைமருதூர், ஐந்தாம் திருமுறை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்தகனை அயிற்சூலத் தழுத்திக் கொண்டார்
அருமறையைத் தேர்க்குதிரை யாக்கிக் கொண்டார்
சுந்தரனைத் துணைக்கவரி வீசக் கொண்டார்
சுடுகாடு நடமாடு மிடமாக் கொண்டார்
மந்தரம்நற் பொருசிலையா வளைத்துக்கொண்டார்
மாகாளன் வாசல்காப் பாகக் கொண்டார்
தந்திரமந் திரத்தரா யருளிக் கொண்டார்
சமண்தீர்த்தென் றன்னையாட் கொண்டார் தாமே

– பொது, ஆறாம் திருமுறை

தொண்டர் தமக்கெளிய சோதியை வேதியனைத்
தூய மறைப்பொருளாம் நீதியை வார்கடல்நஞ்
சுண்ட தனுக்கிறவா தென்று மிருந்தவனை
ஊழி படைத்தவனோ டொள்ளரி யும்முணரா
அண்டனை அண்டர்தமக்கு ஆகம நூல்மொழியும்
ஆதியை மேதகுசீ ரோதியை வானவர்தம்
கண்டனை யன்பொடுசென் றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.

– திருக்கானப்பேர், ஏழாம் திருமுறை

ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க

– சிவபுராணம், எட்டாம் திருமுறை

ஆரணங் காணென்பர் அந்தணர்; யோகியர் ஆகமத்தின்
காரணங் காணென்பர்; காமுகர் காமநன் னூலதென்பர்
ஏரணங் காணென்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.

– நூற்சிறப்பு, திருக்கோவையார், எட்டாம் திருமுறை

கேடிலா மெய்ந்நூல் கெழுமியுஞ் செழுநீர்க்
கிடையனா ருடையஎன் னெஞ்சிற்
பாடிலா மணியே மணியுமிழ்ந் தொளிரும்
பரமனே பன்னகா பரணா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேடெலாஞ் செந்நெற் பசுங்கதிர் விளைந்து
மிகத்திகழ் முகத்தலை மூதூர்
நீடினா யெனினும் உள்புகுந் தடியேன்
நெஞ்செலாம் நிறைந்துநின் றாயே

– கருவூர்த்தேவர், திருமுகத்தலை, திருவிசைப்பா, 9ஆம் திருமுறை

நிட்டையி லாஉடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்சீ ராட்டுந்
திறங்களு மேசிந்தித்து
அட்டமூர்த் திக்கென் அகம்நெக ஊறும்
அமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

– கோயில், திருப்பல்லாண்டு, 9ஆம் திருமுறை

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொடு இருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத்தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே.

– ஆகமச் சிறப்பு, திருமந்திரம், 10ஆம் திருமுறை

நெறிவார் சடையரைத் தீண்டிமுப்
போதும்நீடு ஆகமத்தின்
அறிவால் வணங்கியர்ச் சிப்பவர்
நம்மையு மாண்டமரர்க்
கிறையாய்முக் கண்ணுமெண் தோளும்
தரித்தீறில் செல்வத்தொடும்
உறைவார் சிவபெரு மாற்குறை
வாய வுலகினிலே

– நம்பியாண்டார் நம்பி, 11ஆம் திருமுறை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்
எங்கும் ஆகி இருந்தவர் பூசனைக்கு
அங்கண் வேண்டும் நிபந்தமா ராய்ந்துளான்
துங்க ஆகமம் சொன்ன முறைமையால்.

– திருநகரச் சிறப்பு, பெரியபுராணம், 12ஆம் திருமுறை

உலகபசு பாச தொந்தம் ..... அதுவான
உறவு, கிளை, தாயர், தந்தை, ... மனை,பாலர்,
மலசல சுவாச சஞ்ச ..... லம் அதால் என்
மதிநிலை கெடாமல் உன்தன் ..... அருள்தாராய்.
சலம், அறுகு, பூளை, தும்பை, ... அணி சேயே!
சரவண பவா! முகுந்தன் ..... மருகோனே!
பலகலை சிவ ஆகமங்கள் ..... பயில்வோனே!
பழநிமலை வாழ வந்த ..... பெருமாளே.

– பழநித் திருப்புகழ்.

சென்னியது உன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன் திருமந்திரம் சிந்துர வண்ணப் பெண்ணே!
முன்னிய நின் அடியாருடன் கூடி முறை முறையே
பன்னியது உந்தன் பரம ஆகமப் பத்ததியே!

– அபிராமி அந்தாதி

கதிவாழ்க! வேதம் நல் ஆகமம் வாழ்க! நல் கண்மணிஉன்
பதிவாழ்க! சைவம், தருநீறும் வாழ்க! நல் பாவலர்தம்
மதிவாழ்க! அந்தணர் ஆனிரை வாழ்க! நல் மண்ணிஎனும்
நதிவாழ் பனசை நகர்வாழ் பெரியநல் நாயகியே!

– வாழ்த்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருள்நூல்களில் ஆகமங்கள்

தண்ணிலவார் சடையார்தாம் தந்த ஆகமப் பொருளை
மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ்வகுப்பக்
கண்ணிய அத்திருவருளால் அவ்வுடலைக் கரப்பிக்க
எண்ணிறைந்த உணர்வுடையார் ஈசர்அருள்என உணர்ந்தார்.

– பெரியபுராணம், திருமூலநாயனார் புராணம்: 23

பெருமான் திருவாய் மலர்ந்தரு ளிய ஆகமங்களைத் தமிழ்ப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில்தான் திருமூலருடைய உடலை மறைப்பித்தார் என்கிறார் தெய்வச்சேக்கிழார் பெருமான்.

பரமகருணாநிதியாகிய சிவபெருமானால் அருளிச் செய்யப் பட்ட முதல்நூல்கள் வேத–சிவாகமங்கள் என்பது நமது சமயக் கொள்கை.

அப்பெருமான் அருள்பெற்ற ஸ்ரீஞானசம்பந்தப் பெருமான் முதலான அருளாளர்களால் அருளப்பெற்ற அருள்நூல்கள் பன்னிரு திருமுறைகள்.

இவையன்றி ஸ்ரீஅருணகிரிநாதர், ஸ்ரீதாயுமான சுவாமிகள், ஸ்ரீமத்–பாம்பன் சுவாமிகள், ஸ்ரீஅபிராமிப் பட்டர் போன்ற அனேக அருளாளர்களும் பாடல்களை அருளியுள்ளார்கள்

அவை அனைத்துமே நம்மால் அருள்நூல்கள் என்று தலைமேல் வைத்துக் கொண்டாடப்படுகின்றன. அவ்வருள் நூல்களில் பலவிடங்களில் சிவ ஆகமங்களைப் பற்றிய குறிப்புகள் விரவிக் காணப்படுகின்றன. அவ்வாறு காணப்படும் குறிப்புகளைப் பின்வருமாறு நிரல்படுத்தலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகமங்கள் பெருமானால் அருளப்பட்டவை

திருஞானசம்பந்தப் பெருமான் தம்முடைய பாடல்களில் மூன்று இடங்களில் ஆகமம் என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தி இருக்கிறார்.

முதலாவதாகத் திருவிற்கோலம் என்ற திருத்தலத்தினுடைய பதிகத்தின் ஆறாவது பாடலில் வேதங்கள், வேதாங்கங்கள், ஆகமங்கள் ஆகியவற்றை உலக உயிர்கள் உய்யும் பொருட்டுச் சிவபெருமானே அருளிச்செய்தார் என்பதை அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர்பொழிற் கூக மேவினான்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவன் உறைவிடம் திருவிற் கோலமே.

– ஞானசம்பந்தர் 3:23:6

ஆகமச் செல்வன்

தற்காலத்தில் ஆகமங்களில் வல்லவர்களாக இருக்கக் கூடிய அறிஞர் பெருமக்களுக்குச் சிவாகமச் செல்வர் என்பன போன்ற பட்டங்களை நம்முடைய ஆதீனகர்த்தர்கள் வழங்கி வருவது மரபாக இருக்கிறது. ஆனால் ஆகமச் செல்வன் என்ற ஒரு பட்டத்தைச் சிவபெருமானுக்குத் திருஞானசம்பந்தர் வழங்கி யிருக்கிறார். ஆகமங்களை வழங்கியவனுக்கு ஆகமச் செல்வன் என்ற பட்டம், அதுதானே பொருத்தம். திருவொற்றியூர்த் திருத்தலத்தின் பதிகத்தில் அமைந்த பத்தாவது பாடலிலே இச்செய்தி இடம்பெற்றுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தோகையம் பீலிகொள்வார் துவர்க் கூறைகள் போர்த்துழல்வார்
ஆகமச் செல்வனாரை அலர் தூற்றுதல் காரணமாகக்
கூகையம் மாக்கள் சொல்லைக் குறிக்கொள்ளன்மின் ஏழுலகும்
ஓகை தந்து ஆளவல்லான் உறையும் இடம் ஒற்றியூரே.

– திருஞானசம்பந்தர் 3:57:10

ஆகமங்களின் உற்பத்திமுறை

பெருமான் ஆகமங்களைத் தோற்றுவித்த இடம் குறித்த செய்தியும் திருமுறைகளில் காணக்கிடைக்கிறது.

குறிப்பாக எட்டாம் திருமுறையாகிய திருவாசகத்தில் கீர்த்தித் திருவகவல் பகுதியில் இரண்டு இடங்களில் பெருமான் ஆகமங்களை எந்த இடத்திலிருந்து அருளினான் என்னும் குறிப்பு கிடைக்கிறது.

மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமந் தோற்றுவித் தருளியும்

– திருவாசகம் கீர்த்தி. 9,10

மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்து
உற்றஐம் முகங்க ளாற்பணித் தருளியும்

– திருவாசகம் கீர்த்தி. 19,20)

என்பன அந்த இரண்டு இடங்களாகும்.

நமது சைவ சமயத்தில் 36 தத்துவங்களைக் குறிப்பிடுவார்கள். அதில் சப்தபிரபஞ்சம் என்ற சொற்பிரபஞ்சம் தோன்றுவது நான்காவது தத்துவமாகிய ஈசுவர தத்துவத்தில் தான்.

அந்த ஈசுவரத் தத்துவத்தைத்தான் மணிவாசகப் பெருமான் மகேந்திரம் என்னும் சொல்லால் குறிப்பிடுகிறார் என்று பெரியோர்கள் குறிப்பிடுகிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகமங்கள் உமையம்பிகைக்கு உபதேசிக்கப்பட்டவை

வேதங்களையும் ஆகமங்களையும் பெருமான் முதன் முதலில் உமையம்மைக்கே உபதேசித்தார் என்பது நம் சமயக் கொள்கை. இச்செய்தியானது

ஆகதம் சிவ–வக்த்ரேப்ய: கதஞ்ச கிரிஜா முகே !
மதஞ்ச சிவபக்தானாம் தஸ்மாத் ஆகமம் உச்யதே !!

என்ற ச்லோகத்தின் மூலமாக அறியப்படுகிறது.

இந்தக் கருத்தைத் திருநாவுக்கரசர் பெருமான் தம்முடைய திருவிடைமருதூர் பதிகத்தின் நான்காவது பாடலில் சுவைபக்ட குறிப்பிடுகிறார்.

துணையிலாமையில் தூங்கிருட் பேய்களோடு
அணையலாவது எமக்கு அரிதே எனா
இணையிலா விடை மாமரு தில் எழு
பணையில் ஆகமம் சொல்லும் தன் பாங்கிக்கே.

– திருநாவுக்கரசர் 5:15:4

முதல் உற்பவ காலத்தில் படைப்புத் தொழிலைத் தொடங்கும் முன்னரே பெருமான் ஆகமங்களை அம்பிகைக்கு உபதேசம் செய்திருக்கிறார். இந்தச் செய்தியைத் தான் மேற்கண்ட பாடலில் சொல்லியிருக்கிறார் திருநாவுக்கரசர் பெருமான்.

ஆகம நூல் மொழியும் ஆதி

திருக்கானப்பேர் என்ற காளையார் கோயில் திருத்தலத்திலே புறநீர்மை பண்ணிலமைந்த எல்லோராலும் புகழப்படுகிற பாடலில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெருமானிடம் ஆகம உபதேசம் பெற்றோர் குறித்த தகவலொன்றைத் தருகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொண்டர் தமக்கெளிய சோதியை வேதியனைத்
தூய மறைப்பொருளாம் நீதியை வார்கடல்நஞ்
சுண்ட தனுக்கிறவா தென்று மிருந்தவனை
ஊழி படைத்தவனோ டொள்ளரி யும்முணரா
அண்டனை அண்டர்தமக்கு ஆகம நூல்மொழியும்
ஆதியை மேதகுசீ ரோதியை வானவர்தம்
கண்டனை யன்பொடுசென் றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.

– சுந்தரர் 7:84:8

அண்டர் தமக்கு ஆகம நூல் மொழியும் ஆதி என்று அமையும் அந்தப் பாடலடியில் அமைந்த அண்டர் என்ற என்ற சொல்லுக்கு உரை எழுதிய வல்லுநர்களின் கருத்து பின்வருமாறு அமைகிறது. 'அண்டர்' என்றது, சிவபெருமானிடம் நேர்நின்றும், வழிநிலையில் நின்றும் சிவாகமங்களைக் கேட்ட 30 சிவர்களையும், 36 உருத்திரர்களையும், பிற தேவர் முதலானவர்களையும் குறிக்கும்.

அதாவது சிவாகமங்களைப் பெருமானிடத்திலிருந்து முதலிலே உபதேசம் பெற்றவர்களுடைய எண்ணிக்கை 66 என்று சொல்லப்படுகிறது. அந்த 66 பேர்களுக்கும் பெருமான் ஆகமங்களை உபதேசித்தமுறைக்குப் 'பிரதி ஸம்ஹிதாக் கிரமம்' என்று பெயர்.

அதாவது, காமிகாகமத்தை பெருமான் முதலில் பிரணவர் என்பவருக்கு உபதேசிக்கிறார். பிரணவரிடத்திலிருந்திந்து த்ரிகலர், அவரிடமிருந்து ஹரர் என்று இரண்டு பேர் காமிகாகமத்தை உபதேசமாகப் பெறுகிறார்கள். அவ்வாறு காமிகம் முதலாக அமைந்த முதல் பத்து ஆகமங்களை முப்பது பேர்கள் பெறுகிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விஜயம் முதல் வாதுளம் ஈறாக அமைந்த 18 ஆகமங்களை ஒரு ஆகமத்திற்கு இரண்டு நபர் வீதம் 36 பேர் உபதேசம் பெறுகிறார்கள். ஆக மொத்தம் 66 நபர்கள் உபதேசம் பெறுகிறார்கள். அந்த 66 நபர்களைத்தான் அண்டர் என்ற சொல்லால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குறிப்பிடுகிறார் என்று உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

திருமூலர் பெருமான் இக்கருத்தை மிக அழகாக குறிப்பிடுகிறார்.

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொடு இருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத்தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே.

– ஆகமச் சிறப்பு, திருமந்திரம்

பெருமான் ஆகம வடிவினன் – ஆகமம் – தந்திரம்

திருநாவுக்கரசர் தம்முடைய பாடல்களில் ஆகமம் என்ற சொல்லை ஒரே ஒரு இடத்தில்தான் குறித்துள்ளார். ஏனைய இடங்களில் ஆகமங்களைக் குறிப்பதற்குத் தந்திரம் என்ற சொல்லைத்தான் பயன்படுத்துகிறார்.

தந்திரம் என்னும் சொல்லும் ஆகமங்களைத் தான் குறிக்கிறது. காமிக தந்திரம், காரண தந்திரம் என்று ஆகமங்களைத் தந்திரம் என்ற பெயரால் வழங்கும் மரபு உள்ளது.

தந்திரம் என்றவுடன் சூழ்ச்சி செய்தல் என்று தற்கால வழக்கில் உள்ள பொருள் ஞாபகத்திற்கு வரலாம். இங்கு தந்திரம் என்ற சொல்லின் பொருள் அதுவல்ல.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எதைப் பின்பற்றுவதால் நமக்கு நன்மை ஏற்படுகிறதோ அதற்குத் தந்திரம் என்று பெயர்.

திருநாவுக்கரசு பெருமான் தம்முடைய போற்றித் திருத் தாண்டகத்திலும், திருப்புள்ளிருக்குவேளூர் திருத் தாண்டகத்திலும் பெருமான் ஆகம வடிவனாக இருக்கிறான் என்னும் செய்தியைக் குறித்துள்ளார்.

முன்னியாய் நின்ற முதல்வா போற்றி
மூவாத மேனி யுடையாய் போற்றி
என்னியா யெந்தை பிரானே போற்றி
யேழி னிசையே யுகப்பாய் போற்றி
மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமுந் தந்திரமு மானாய் போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

– திருநாவுக்கரசர் 6:57:5

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும் பெம்மானைப்
பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமுந் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

– திருநாவுக்கரசர் 6:54:8

மணிவாசகப் பெருந்தகையும் பெருமான் ஆகம வடிவினன் என்னும் கருத்தை உறுதிசெய்துள்ளார். ஆகமம் ஆகிநின்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அண்ணிப்பான் தாள் வாழ்க (சிவபுராணம்– 4) என்று தமது திருவாசகத்தின் முதல் பகுதியாகிய சிவபுராணத்தின் நான்காவது அடியிலேயே இக்கருத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறைவன் உருவமும் வடிவமும் அற்றவன். ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாதவன். ஒரு சமயத்திலே அந்தப் பெருமானுக்கு ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்ற மந்திரங்கள் வடிவமாக இருக்கின்றன. ஒரு சமயத்திலே ஆகமங்களே வடிவமாக இருக்கின்றன.

ஆகமங்கள் பெருமானுக்கு அவயவங்களாக இருப்பதை நாம் ஆகமநியாசம் செய்யும் போது அறிகிறோம். ஆகம நியாசம் என்பதைக் காமிகாகமம் ஸ்ருஷ்டிக் கிரமம், ஸம்ஹாரக் கிரமம் என்று இரண்டாகக் குறிப்பிடுகிறது.

காமிகம் தொடங்கி வாதுளம் ஈறாகத் தலை முதல் கால் வரை இருந்தால் அதற்கு ஸ்ருஷ்டிக் கிரமம் என்று பெயர். வாதுளம் தொடங்கிக் காமிகம் ஈறாக கால் முதல் தலை வரை இருந்தால் அதற்கு ஸம்ஹாரக் கிரமம் என்று பெயர்.

ஆகமங்கள் பெருமானது அவயவங்களாக விளங்கும் முறைமை திருமுறைகளில் வெளிப்படையாகச் சொல்லப் படவில்லை எனினும் திருநாவுக்கரசர் பெருமானது திருவடித் திருத்தாண்டகத்தில் ஆகமங்கள் சிவப்பரம்பொருளின் திருவடியாக விளங்கும் திறம் அழகாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

நறுமலராய் நாறும் மலர்ச்சேவடி நடுவா யுலகநா டாயவடி
செறிகதிருந் திங்களுமாய் நின்றவடி தீத்திரளா யுள்ளே திகழ்ந்தவடி
மறுமதியை மாசு கழுவும்மடி மந்திரமுந் தந்திரமும் ஆயவடி
செறிகெடில நாடர் பெருமானடி திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி

– திருநாவுக்கரசர் 6:6:8

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தந்திரமாவது நீறு

ஆகமங்கள் பெருமானது வடிவாக மட்டுமல்ல. அவன் விரும்பி அணியும் திருநீறாகவும் அதுவே விளங்குகிறது என்பதைத் திருஞானசம்பந்தரது திருநீற்றுப்பதிகம் எடுத்துக்காட்டுகிறது.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

– ஞானசம்பந்தர் 2:66:1

திருக்கயிலாயத்தில் ஆகம வழிபாடு

சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருவஞ்சைக்களம் என்னும் மலைநாட்டுத் தலத்தில் கயிலைப் பதத்தை அருளுகிறான் பெருமான்.

தான் கயிலையில் முன்னரே கொடுத்த வாக்கிற்கிணங்கத் தக்க சமயத்தில் தடுத்தாட்கொண்டதோடு வெள்ளையானையை அனுப்பி அவரை கயிலாயத்திற்கு அழைத்துச் செல்லப் பிரம்மன், விஷ்ணு முதலான தேவர்களையும் அனுப்பிவைக்கிறான். இச்செய்திகளை எல்லாம் தனது திருநொடித்தான்மலைத் திருப்பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

கயிலாயத்திற்குச் செல்லும் போது சுந்தரமூர்த்தி சுவாமிகள், பெருமானால் அருளப்பட்ட ஐராவதத்தை வலம்வந்து வணங்கி அதிலே ஏறுகிறார். கயிலாயத்தை நோக்கிச் செல்கிறார் அவர் கயிலாயத்தை நெருங்கும் போது அவர் காதிலே பல விதமான ஒலிகள் கேட்கின்றன. அப்படி அவர் காதில் கேட்ட ஒலிகள் என்னென்ன என்பதையெல்லாம் பதிவு செய்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரவொலி ஆகமங்கள் அறிவார்அறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெலாம்வந் தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே.

– சுந்தரர் 7:100:8

'அரகர' என்னும் ஒலியும் (ஹர ஹர என்னும் முழக்கம்), ஆகமங்களின் ஒலியும், அறிவுடையோர் அறிந்து பாடும் பாட்டுக்களின் ஒலியும், பல்வேறு வகையாகப் பொருந்திய வேதங்களின் ஒலியும் ஆகாயம் முழுதும் நிறைந்துவந்து எதிரொலிக்கவும், மேன்மை நிறைந்த, 'வாணன்' என்னும் கணத்தலைவன் வந்து, முன்னே வழிகாட்டிச் செல்லவும், ஏறத்தக்கதொரு முதன்மை நிறைந்த யானையை, திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வன் எனக்கு அளித்தருளினான் என்று பாடுகிறார்.

பூவுலகில் ஆகம வழிபாடு

நீறுதிரு மேனிமிசை ஆடிநிறை வார்கழல் சிலம்பொலிசெய
ஏறுவிளையாட விசை கொண்டிடு பலிக்கு வரும் ஈசனிடமாம்
ஆறுசமயங்களும் விரும்பியடி பேணி அரன் ஆகமம் மிகக்
கூறுமனம் வேறிரதி வந்தடியர் கம்பம்வரு கோகரணமே.

– திருஞானசம்பந்தர் 3:79:06

சிவபெருமான் வீற்றிருந்து அருளும் இடமாகிய திருக்கோகரணத் தலத்தைப் பற்றித் திருஞானசம்பந்தப் பெருமான் கூறும்போது, அப்பெருமான் வீற்றிருந்தருளும் இடமானது சிவாகம விதிப்படி இறைவனின் திருவடிகளை மனதில் நிறுத்திச் சிவானந்தம் மேலிடவும், உடலில் நடுக்கம் வருகின்ற தன்மையிலும் வழிபடுகின்ற ஆறு சமயத்து அடியவர்களும் வாழ்கின்ற ஊர் என்று குறிப்பிடுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பவித்ரோற்சவம்

சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள பரார்த்த பூஜா விதி எனும் திருக்கோயில் வழிபாட்டில் மாஸபூஜா விதி என்பதும் ஒன்றாகும்.

மாஸ பூஜாவிதியானது ஒவ்வொரு மாதத்திலும் மாதப்பிறப்பு அல்லது அம்மாதத்தின் முக்கிய நாள் ஒன்றில் அம்மாதத்திற்குரிய சிறப்புப் பொருளைப் பயன்படுத்திப் பெருமானை பூஜிப்பதாகும்.

அதாவது மார்கழி மாதத்தில் நெய், தையில் தேன், மாசியில் நெய்க்கம்பளம், பங்குனியில் தயிர், சித்திரையில் மரிக்கொழுந்து, வைகாசியில் சந்தனம், ஆனியில் பழம், ஆடியில் பால், ஆவணியில் சர்க்கரை, புரட்டாசியில் அப்பம், ஐப்பசியில் அன்னம், கார்த்திகையில் தீபம் என ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு சிறப்புப் பொருள் பெருமான் பூஜைக்காகச் சொல்லப்பட்டுள்ளது.

மார்கசீர்ஷே க்ருதம் ப்ரோக்தம் புஷ்யே க்ஷௌத்ரம் ப்ரசஸ்யதே !
ஸ–க்ருதம் கம்பளம் மாகே தபஸ்யே ததிகீர்த்திதம் !!
மதுமாஸே தமனகம் மாதவே கந்தபூஜனம் !
பலபூஜா சுக்ரமாஸே க்ஷீரேணாஷாடபூஜனம் !!
நபோமாஸே சர்கரா ச நபஸ்யே அபூபபூஜனம் !
அந்நபூஜா துலாமாஸே கார்த்திகே தீபபூஜனம் !!

– பக் 83, மாஸபூஜாகாலங்கள், சைவகாலவிவேகம்.

கார்த்திகையில் தீப வழிபாடும் ஐப்பசியில் அன்னாபிஷேக வழிபாடும் இன்றளவும் பெரும்பாலான தலங்களில் நடைமுறையில் உள்ளன. இவ்வாறு ஒவ்வொரு மாதமும் சிவாலயத்தில் நடைபெறும் விழாக்களுள் திருமயிலையில் நடைபெறும் சில விழாக்களை திருஞானசம்பந்தப் பெருமான் தம்முடைய பூம்பாவைப் பதிகத்தில் தொகுத்துத் தந்திருக்கிறார். 'மட்டிட்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புன்னையங் கானல் மடமயிலை'; எனத்தொடங்கும் அப்பதிகத்தில் புரட்டாசி மாதம் தொடங்கி ஆனிமாதம் வரையிலான பத்து மாதங்களில் திருமயிலையில் நடைபெறும் மாதச்சிறப்புகளை விளக்குகிறார்.

புரட்டாசியில் நடைபெறும் பூஜையில் ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு அட்டிட்டல் எனும் மாகேச்வர பூஜை சிறப்பாக நடைபெறுவதையும், ஐப்பசி ஓணத்தில் நடைபெறும் கொடியேற்றத்தை ஐப்பசிஓண விழா என்றும், கார்த்திகை தீபபூஜையை கார்த்திகை விளக்கீடு எனவும், மார்கழி திருவாதிரை உத்ஸவத்தை ஆதிரை நாள் என்றும், தை மாதத்தில் நடைபெறும் நெய்ப்பூஜையை நெய்ப்பூசு மொண்புழுக்க நேரிழையார் கொண்டாடும் தைப்பூசம் எனவும், மாசி மாதத்தில் அங்கு நடைபெறும் கடலாட்டையும், பங்குனி மாதத்தில் செய்யப்படும் ப்ரஹ்மோத்ஸவத்தை மலிவிழா, கலிவிழா, பலிவிழா, ஒலிவிழா என்றும், சித்திரை மாதத்தில் நடைபெறும் அஷ்டமி வழிபாட்டை பண்ணார் பதினெண் கணங்கள் தம் அட்டமிநாள் என்றும், வைகாசியில் நடைபெறும் வஸந்த உத்ஸவத்தை பொற்றாப்பு என்றும், ஆனியில் நடைபெறும் பவித்ரோத்ஸவத்தை பெருஞ்சாந்தி என்றும் குறிப்பிடுகிறார்.

உரிஞ்சாய வாழ்க்கை யமணுடையைப் போர்க்கும்
இரும் சாக்கியர்கள் எடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரத்தான் தன்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்.

- திருஞானசம்பந்தர் 2:47:10

என்றவாறு அமைந்துள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்பாடலில் ஆனி மாதத்தில் நடைபெறும் விழாவாகப் பெருஞ்சாந்திப் பெருவிழாவைக் குறித்துள்ளார் ஞானசம்பந்தப் பெருமான்.

இப்பெருஞ்சாந்தி விழா என்பது மஹாப் பிராயச்சித்தம் எனப்படும் பவித்ரோற்சவமேயாகும். "ஏகாப்தோத்பவ கர்மலோப–பிதுரம் நித்யக்ரியா பூரகம்" அதாவது ஆண்டுமுழுதும் செய்யப்பட்ட பூஜைகளில் ஏற்பட்ட தோஷங்களைப் போக்குவதற்காகவும், நித்யபூஜைகள் நிறைவுபெற்று பூஜையின் முழுமையான பலன் ஏற்படுவதற்காகவும் பவித்ரோற்சவம் நடத்தப்படவேண்டும் என்றும், இந்த உத்ஸவத்தை "ஆஷாடாதி த்ரயோ மாஸா: ஜ்யேஷ்ட–மத்யம–கந்யஸா:" அதாவது ஆனிமாதத்தில் செய்தல் உத்தமம், ஆடியில் செய்தல் மத்யமம், ஆவணியில் செய்தல் அதமம் என்றும் காமிகம் முதலான ஆகமங்கள் விளக்குகின்றன.

எனவே மஹாசாந்தி என்பதையே பெருஞ்சாந்தி என ஞானசம்பந்தப் பெருமான் குறிப்பிட்டிருக்கிறார் என்பதை நாம் உணரவேண்டும். ஆகமக் கருத்துகளோடு இந்தப் பதிகப் பாடல்களைப் பொருத்திப்பார்க்கும் போதுதான் நமக்கு பதிகத்தின் முழுமையான பொருள் = உண்மை விளக்கம் கிடைக்கிறது.

வாழ்முதலாகிய பொருள்

சைவர்கள் தங்கள் வாழ்வின் முதற்பொருளாக, முக்கியப் பொருளாகச் சிவப்பரம்பொருளையே கொள்ள வேண்டும் என்பது விதி. எனவேதான் தீக்ஷை பெற்ற உடனேயே ஆசார்யர் சீடனை நோக்கி சில கட்டளைகளைப் பிறப்பிக்கிறார்.

- உலகத்திற்குக் காரணனான இறைவனை எக்காரணம் கொண்டும் இகழக்கூடாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- இறைவன் அருளிச்செய்த அருள்நூல்களான வேதங்களையும் ஆகமங்களையும் இகழக்கூடாது.
- குருவையும் ஸாதகர்களையும் எக்காரணம் கொண்டும் இகழக்கூடாது.
- சிவ–சிவாலய–குரு ஆகியோரின் நிழலைத் தாண்டக் கூடாது.
- சிவபூஜை, சிவ அக்னி வழிபாடு, குருபூஜை ஆகியவற்றை உயிருள்ளளவும் செய்யவேண்டும்.

என்பன அக்கட்டளைகள்.

தீக்ஷை பெற்றுக்கொண்ட சீடன் ஒவ்வொருநாளும் காலை எழுந்தவுடன் முதன்முதலாகச் செய்ய வேண்டியது சிவபெருமானை தியானிப்பதே ஆகும் என்கின்றன ஆகமங்கள். தீக்ஷை பெற்றுக் கொண்டவர்களுக்கான அன்றாடக் கடமைகளை ஆகமங்களின் வழியில் அமைத்துத்தந்த ஸ்ரீமத் அகோர சிவாசார்யார் தனது க்ரியா–க்ரம–த்யோதிகா என்ற நூலில் அவற்றை சொல்லத் துவங்கும் போது,

"ப்ராதஸ்–ஸமயாத் பூர்வம் பஞ்சநாடிகாவச்சேதே ஸமுத்தாய, சுசிர்வாபி அசுசிர் வா யதாஸம்பவ–சௌசயுக்த: ஹ்ருத்பத்மே த்வாதசாந்தே குரூபதிஷ்டப்ரகாரேண சிவம் த்யாத்வா" என்று கூறுகிறார்.

அதாவது காலையில் சூரியன் உதிப்பதற்கு இரண்டு மணி நேரங்களுக்கு முன் எழுந்து, முடிந்த அளவுக்குத் தன்னைத் தூய்மை செய்துகொண்டு இதயத்திலோ த்வாதசாந்தத்திலோ குருநாதர் சொன்ன வழியில் சிவபெருமானைத் தியானிக்க வேண்டும் என்பது இதன் பொருள். இதன் மூலம் நம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாழ்க்கையின் முதற்பொருள் பெருமானே என்பதை உணர்த்துகிறது நம் சமயம்.

இக்கருத்தைத்தான் 'போற்றி என் வாழ்முதலாகிய பொருளே' எனத் திருப்பள்ளியெழுச்சியின் முதல் பாடலில் முதல் அடியில் வைத்துப் புரியவைத்திருக்கிறார் மணிவாசகப் பெருமான்.

இது அவன் திரு உரு

சமயதீக்ஷை பெற்றுக்கொள்ளும்போது சீடனை யாகசாலையின் வெளியில் நிறுத்தி, சில ஸம்ஸ்காரங்களை அவனுக்குச் செய்து, அவனது கண்களை ஒரு துணியால் கட்டி, கைகளில் மலர்களைக் கொடுத்து, ஆசார்யர் அவனது கரம் பற்றி அவனை யாகசாலை எனும் சைவ சமயத்திற்குள் அழைத்துச் செல்வார். பின்னர் சீடனது கரம் பற்றி யாகசாலையின் மையப் பகுதியில் அமைந்திருக்கும் வேதிகையின் தென்புறத்தில் சீடனை நிறுத்தி, அவனது கண்களில் கட்டப்பட்டிருக்கும் துணியை அகற்றி மண்டலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானைக் காண்பித்து, "குழந்தாய் தேவர்களுக்கும் அரியவரான பெருமான் எங்கோ இல்லை. இங்கே தான் இருக்கிறார்" என்று கூறி அவனுக்குப் பெருமானைக் காட்டுகிறார். அவ்விடத்தில் வரும் வாக்கியம்,

' ஹே புத்ரக, அபவர்க அர்ஹத்வ வர்ஜிதை: அமரை: அபி, அத்ருஷ்டம் பரமேச்வரம் நேத்ரே உந்மீல்ய பச்ய' என்பதாகும்.

இதன்பொருள்: குழந்தாய், அமரரும் அறியமுடியாத / காண முடியாத பரமேச்வரன் இங்கே இருக்கிறார். கண்களைத் திறந்து பார் என்பதாகும். இக்கருத்தை அப்படியே உள்வாங்கிக்கொண்டு எழுதியதுபோல் அமைந்துள்ளது 'அதுபழச் சுவையென' என்னும் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பாடலில் வரும் 'அமரரும் அறியார், என்ற தொடர் அமரர: அபி அத்ருஷ்டம் பரமேச்வரம் என்னும் ஆகம வாக்கியத்துக்கு இணையாக உள்ளது. அதுபோலவே 'இது அவன் திரு உரு, இவன் அவன் எனவே' எனச் சுட்டிக்காண்பிக்கும் தொடர் பரமேச்வரம் நேத்ரே உந்மீல்ய பச்ய என்னும் ஆகம சுட்டிக் காட்டலோடு பொருந்திப்போகிறது. நம்முடைய அருளாளர்கள் ஆகமக் கருத்துகளை எவ்வளவு தூரம் உள்வாங்கியுள்ளனர் என்பதற்கு இதுபோன்ற இடங்கள் நல்ல சான்றுகளாகும்.

ஆகம வழியில் ஆலயமும் அரசும்

பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணத்தில் ஆகமங்களின் பெருமையைப் பல இடங்களில் பதிவு செய்துள்ளார் சேக்கிழார் பெருமான். பல இருப்பினும் இரண்டு இடங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

திருக்கோயில் கட்டிய அடியவர் ஒருவரைப்பற்றியும், திருக்கோயில்களைப் பரிபாலனம் செய்த மன்னவன் ஒருவனைப் பற்றியும் பெரிய புராணத்தில் இடம்பெற்ற செய்திகள்தான் அவை.

ஆகம வழியில் திருக்கோயில் அமைத்தல்

உள்நின்று உறையும் இறைவனுக்கு புறத்தினில் இல்லாமல் அகத்தினில் கோயில் கட்டிய பூசலார் நாயனாரின் அருள் வாழ்வைச் சொல்லும் சேக்கிழார் பெருமான், அந்த நாயனார் தம் மனதில் திருக்கோயில் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கிய நாள் முதல் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து குடமுழுக்கு விழா நடத்துதல் ஈறாக அனைத்துக் கிரியைகளையும் ஆகம விதிப்படியே செய்தார் என்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாதனத் தோடு தச்சர் தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக் கால யஞ்செய் நலம்பெறும் நன்னாள் கொண்டே
ஆதரித்து ஆக மத்தால் அடிநிலை பாரித் தன்பால்
காதலில் கங்குற் போதுங் கண்படா தெடுக்க லுற்றார்.

- சேக்கிழார் 12:65:6

என்னுடைய நாதனுக்கு என் மனதில் நான் கோயில் கட்டுகிறேன். அதை என் விருப்பப்படி நான் அமைத்துக்கொள்ளலாமே என்று நினைக்கவில்லை பூசலார் நாயனார். மாறாகத் திருக்கோயில் கட்டுவதற்கான அனைத்துக் கிரியைகளையும் ஆகம விதிப்படியே நிறைவேற்றியிருக்கிறார் அவர்.

இதன்வழி சைவர்களாகிய நாம் மனதாலும் ஆகம விரோதமாக எதனையும் செய்துவிடலாகாது என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார் சேக்கிழார் பெருமான்.

ஆகம வழியில் அரசு பரிபாலனம்

இக்காலத்தில் இருக்கும் அரசுகள் தங்கள் நாட்டின் பல்வேறு நலத்திட்டங்களுக்கு ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்வது நமக்குத் தெரிந்த ஒன்றுதான்.

ஆனால் இவ்வழக்கமானது பழங்காலம் முதலே நம்மிடத்தில் வழக்கத்திலிருந்திருக்கிறது. அன்றும் அரசனானவன் தனது அரசின் நிதி ஒதுக்கீட்டில் திருக்கோயில்களின் நித்திய பூஜைக்கு என்றும், நைமித்திகத்திற்கு என்றும் பல நிவந்தங்களையும் கொடைகளையும் வழங்கியுள்ள செய்திகளைக் கல்வெட்டுகள் வாயிலாக நாம் அறிகிறோம்.

அரசர்களால் திருக்கோயில்களுக்கு வழங்கப்படும் கொடைகள் வருடா வருடம் ஏற்படுத்தப்படுபவை அல்ல.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த அரசன் பதவி ஏற்றவுடன் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு இந்நிவந்தங்கள் நடைபெற வேண்டும் என மொத்தமாக பெருமான் பெயரில் அர்ப்பணம் செய்துள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது.

சேக்கிழார் பெருமான், ஆரூரைத் தலைமையிடமாகக் கொண்டு அரசாட்சி செய்த மனுநீதிச்சோழனுடைய வரலாற்றினைக் குறிப்பிடுகிறார்.

அப்பகுதியில் மனுநீதிச்சோழ மன்னன் கோயில்கள் எல்லாம் எப்படி பரிபாலனம் செய்யப்படவேண்டும் எப்படி போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற முறைகளை ஆராய்ந்து ஆகமங்கள் எந்தெந்த இடங்களுக்கு எந்தெந்த அளவில் பொருள் தரப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறதோ அந்தந்த இடங்களுக்கு ஆகமங்கள் சொல்லிய முறையிலேயே மானியங்களை நிவந்தங்களை நிறுவியிருக்கிறார் என்ற செய்தியைப் பதிவு செய்துள்ளார்.

பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்
எங்கும் ஆகி இருந்தவர் பூசனைக்கு
அங்கண் வேண்டும் நிபந்தமா ராய்ந்துளான்
துங்க ஆகமம் சொன்ன முறைமையால்.

– சேக்கிழார் 12:1:101

ஆகம வழிநின்று வழிபடுவோர் பெறும் பேறு

ஆகமங்கள்வழிநின்று வழிபடுவோர்க்குத் தன் திருவருளைப் பெருமான் உவந்து நல்குவான் என்பதைச் சுந்தரர் பெருமான் உறுதிபடக்கூறியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்மானே ஆகம சீலர்க் கருள்நல்கும்
பெம்மானே பேரரு ளாளன் பிடவூரன்
தம்மானே தண்டமிழ் நூற்புல வாணர்க்கோர்
அம்மானே பரவையுண் மண்டளி அம்மானே.

– சுந்தரர் 7:9:6

ஆகம விரோதத்தால் ஏற்படும் தீமைகள்

ஆகம வழி நில்லாமையால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியும் திருமுறையுள் குறிப்பு உள்ளது. ஆணவ மலம் நிரம்பப் பெற்ற தக்கனின் கதையைக் குறிப்பிட்டு இக்கருத்தை விளக்கியுள்ளார் திருநாவுக்கரசர் பெருமான். ஆகம அறிவு இல்லாததால் தான் அவன் ஆணவமலப் பிடிப்புடன் இருந்தான் எனச் சொல்வதும் பொருந்தும்.

இந்திரன் பிரமன் அங்கி எண்வகை வசுக்களோடு
மந்திரம், மறையது ஓதி வானவர் வணங்கி வாழ்த்தத்
தந்திர மறியாத் தக்கன் வேள்வியைத் தகர்த்த ஞான்று
சந்திரற்கு அருள் செய்தாரும் சாய்க்காடு மேவினாரே.

– நாவுக்கரசர் 4:65:5

ஆகமத்தின் பெருமை உணரார் வேறு எதுவும் உணரார்

பாம்பன் சுவாமிகள் வாழ்ந்த காலம் திருமுறைகள் பெரும்பாலும் அச்சில் வராத காலம். எனினும் திருமுறைகளை முற்ற ஓதி உணர்ந்த பாம்பன் சுவாமிகள் தாம் இயற்றிய திருப்பா என்ற பகுதியில், மூவர் தேவாரங்களையும் ஆராய்ந்து, தேவார ஆசிரியர்கள் யார்? யார்? பதிகத்தின் எந்தத் திருப்பாடலில் ஆகமங்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள் என்பதைத் தொகுத்து திருமுறை அருளிய அருளாளர்கள் வாக்கினை கேட்ட பின்பும் அவற்றையெல்லாம் ஏற்காமல் ஆகமங்கள் இல்லை என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்பவனுக்கும் உளறுபவனுக்கும் நான் என் சொல்வேன் என் குருமணியே என்று பாடுகிறார்.

சீரிய திருவிற்கோலம் பதிகத்தே இரு மூன்றினும் ஒற்றி
ஊரினப் பதிகம் பத்திலும் பொழிலேர் ஓங்குகோ கரணவாறினுமா
ஆரியன் ஞானப் பாலறாவாயன் ஆகமச் சிறப்பெடுத்து அதிர்த்த
காரியம் தேராது உளறுநர்க் கியாது கழறுவேன் என் குருமணியே.

என்றும்

திருவிடை மருதூர்ப் பதிகம்நான் கதிலே தேசிக நாவரசுகளும்
மருவடர் கானப் பேர்திருவாரூர் மண்டளி கயிலைகட் குரிய
துரிசறு பதிகம் எட்டொரா றெட்டிற் சுந்தர ரும்பதி நூலை
பொருளுறவிதந்துசொனதறியார்க்கென்புகலுவென்என் குருமணியே.

என்றும் இரு பாடல்களில் நயம்படத் தொகுத்துத் தந்து வழிகாட்டியிருக்கிறார்.

ஆகமக் கருத்துகளின் பிழிவே திருமுறைகள்

திருமுறைகளில் மேலும் சில இடங்களிலே இதுபோன்ற குறிப்பு காணப்படுகிறது. ஞானசம்பந்தப் பெருமானது தேவாரப் பாடல்களிலே என்னென்ன செய்திகள் இடம்பெற்றுள்ளன என்று சொல்ல வந்த நம்பியாண்டார் நம்பிகள்

பன்மறையோர் செய்தொழிலும் பரம சிவா கமவிதியும்
நன்மறையின் விதிமுழுதும் ஒழிவின்றி நவின்றனையே.
- ஆளுடையப் பிள்ளையார் திருக்கலம்பகம்

என்று பாடுகிறார்.

இப்பாடலில் சிவாகமம் என்னும் சொல்லைப் பயன்படுத்தி இருக்கிறார், நம்பியாண்டார் நம்பிகள். ஞானசம்பந்தப் பெருமான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமது பதிகங்களில் வேதியர்களின் கடமைகள், மேலான சிவாகமங்களில் கூறப்படுள்ள செய்திகள், வேதவிதிகள் ஆகிய அனைத்தையும் குறிப்பிட்டுள்ளார் எனச் சொல்கிறார் இதன்வழி நம் திருமுறையாசிரியர்கள் ஆகமங்களை நன்கு ஓதி உணர்ந்துள்ளனர் என்பது விளங்குகிறது.

அதேபோல ஆளுடையப் பிள்ளையார் திருவுலா மாலையில்

ஆகமங்கள் கேட்பார் அருங்கலைநூல் ஆதரித்துப்
போகம் ஒடுங்காப் பொருள்துய்ப்பார் சோகமின்றி

- ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை

என்று ஞானசம்பந்தப் பெருமான் ஆகமம் கேட்கும் திறத்தைக் குறிப்பிடுகிறார் நம்பிகள்.

சிவாகமம் என்னும் சொல் திருமுறைகளில் திருமந்திரத்திலும் பதினோராம் திருமுறையிலும் மட்டும்தான் காணப்படுகிறது.

செப்பும் சிவாகமம் என்னுமப் பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில்ஒரு கோடி யுகமிருந் தேனே

- 13, பாயிரம், திருமந்திரம்

அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணிநின் றப்பொருள் ஏத்துவன் நானே .

- 2, ஆகமச்சிறப்பு, திருமந்திரம்

அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அண்ணல் அறைந்த அறிவறி யாவிடில்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே .

- 7, ஆகமச்சிறப்பு, திருமந்திரம்

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் முழுவதும் ஆகமஸாரமே.

பனிரெண்டாம் திருமுறையாகிய பெரியபுராணத்தில் பல இடங்களில் ஆகமங்களின் சிறப்பு பேசப்படுகிறது. குறிப்பாக கண்ணப்பநாயனார் புராணம், திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணம், திருநீலநக்க நாயனார் புராணம், திருமூலநாயனார் புராணம், பூசலார் நாயனார் புராணம் ஆகியவற்றுள் ஆகமச் சொல்லாட்சியும் கருத்துகளும் அதிகமாகக் காணப்படுகிறது.

திருமந்திரத்தையும் பிற திருமுறைகளையும் முழுதும் முற்ற ஓதினால் ஆகமங்களோடு தொடர்புடைய பல செய்திகள் கிடைக்கக்கூடும். மேலும் அருளாளர்கள் வாக்கு ஆகம வாக்குதான் என்னும் உண்மையும் புலப்படும்.

பெருமான் நேரடியாகச் சொன்னவை வேதங்களும் ஆகமங்களும். அவனது அருளைப் பரிபூரணமாகப் பெற்றவர்கள் அருளியவை திருமுறைகள். ஞானசம்பந்தப் பெருமான் 'எனதுரை தனதுரையாக' என்று சொல்லி இருப்பதன் நுட்பம் ஆகமக் கருத்துகளே திருமுறைகளாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை உணரவைப்பதற்குத்தான் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீஅருணகிரிநாதர் திருவாக்கில் ஆகமங்கள்

திருமுறைகளைத் தொடர்ந்து பிற அருளாளர்களுடைய திருவாக்குகளில் ஆகமங்களைப் பற்றிக் கூறப்படும் பகுதிகளை நாம் காண இருக்கிறோம்.

அவற்றுள் சித்தாந்த சாத்திரங்கள் மற்றும் திருவாவடுதுறை தருமையாதீனங்களின் பண்டார சாத்திரங்களில் ஆகமங்களைப் பற்றிய குறிப்புகள் மிக மிக அதிகமாகக் காணப்படுகின்றன.

சித்தாந்த சாத்திரங்களில் ஒவ்வொரு பகுதியைத் தொடங்கும் போதும் "பெருமான் அருளிய ஆகமநூல் வழி" என்று சொல்லியே அவ்வருள்நூல்களின் ஆசிரியர் பெருமக்கள் அனைவரும் விஷயத்தைத் தொடங்குகின்றனர்.

ஆனால் அந்த சாத்திரங்களையெல்லாம் எழுத்தெண்ணிப் படித்தவர்கள் (போலத் தெரிகின்ற) பலர் மூலநூல்களாகிய வேத–சிவாகமங்களுக்கு முரணாகப் பேசுவது வியப்பை அளிக்கிறது. அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் முருகன் அருள் முழுதும் பெற்றவரும்,"வாக்கிற்கு அருணகிரி" எனப் புகழ்பெற்றவருமாகிய அருணகிரிநாத சுவாமிகள் அருளிய திருப்புகழ் ஆகமங்களைப் பற்றி என்ன/எப்படிப் பேசுகின்றது என்று பார்ப்போம்.

பொதுவாகவே திருமுறை ஆசிரியர்கள், அருணகிரிநாதர் முதலான அருளாளர்கள் ஆகிய அனைவருக்கும் தங்கள் அருட்பாடல்களில் பெருமானைப் புகழ்வது மட்டுமே முக்கிய நோக்கம். ஆனாலும் அவர்கள் பலரும் பெருமான் அருளிய அருள்நூல்களாகிய வேத–சிவாகமங்களைப் பல இடங்களில் பல கோணங்களில் விளக்கி இருக்கின்றனர் என்றால் அவற்றின் பெருமைகளை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகப்பெருமானின் திருவருளால் பதினாறாயிரம் திருப்பாடல்களைப் பாடிய அருளாளர் அருணகிரிநாத சுவாமிகள். அவற்றுள் நமக்கு 1324பாடல்களே கிடைத்திருக்கின்றன. அதனுள் சுமார் 50க்கும் மேற்பட்ட இடங்களில் ஆகமம் என்ற பெயர் குறிப்பினைக் காணமுடிகிறது.

வைதிக–சைவத்தின் மூல இலக்கியங்களாகிய வேத–சிவாகமங்கள் முழுமுதற்பொருளாகிய பெருமானே அருளிச் செய்தவை என்பதை நாம் முன்னரே பார்த்தோம். அருணகிரிநாத சுவாமிகள் முருகப்பெருமானை "மரபுக்கு உசித ப்ரபு" (சிவபெருமான் வழியைப் பின்பற்றுபவர்) என்று போற்றுவார். அறுமுகச் சிவம் என்றும் குமாரபரமேச்வரன் என்றும் போற்றுவார் பாம்பன் சுவாமிகள். எனவே அவ்விருவருக்கும் வேற்றுமை இல்லை என்பது விளங்கும்.

அவ்வகையில் வேத–சிவாகமங்களாகிய மூலநூல்களை முருகப்பெருமானே அருளினான், முருகப்பெருமானே வேத–சிவாகமங்களின் தலைவன், முருகப்பெருமானே ஆகமங்களை உபதேசிக்கும் ஞானாசாரியன், வேதாகமங்கள் முருகப் பெருமானின் புகழையே பேசுகின்றன என்று பல வகைகளில் வேதாகமங்களைப் போற்றிக் குறிப்பிடுகிறார் அருணகிரிநாதப் பெருமான்.

கைத்தருண சோதி எனத் தொடங்கும் சிதம்பரத் திருப்புகழில் "சுத்த சிவஞானப் பெருமாளே" என்றும், சீதள வாரிஜ பாதா எனத் தொடங்கும் சிறுவை திருப்புகழில் "ஆகமசார சொரூபா நமோ நம" என்றும், தசையாகிய எனத் தொடங்கும் கருவூர்த் திருப்புகழில் "அகிலாகம வித்தகனே" என்றும், சீதவாசனை எனத் தொடங்கும் மதுரைத் திருப்புகழில் "வாதவூரனை மதித்தொரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குருக்களென ஞானபாதம் வெளியிட்டு" என்றும், ஊனாரும் எனத் தொடங்கும் திருவாடானைத் திருப்புகழில் "ஞானாகமத்தை அருள் ஆடானை நித்தமுறை பெருமாளே" என்றும், வானோர் வழுத்துனது எனத் தொடங்கும் இராமேசுவரத் திருப்புகழில் "ஞானாபரர்க் கினிய வேதாகமப் பொருளை நாணாதுரைக்குமொரு பெருமாளே" என்றும், கறுத்துநீவிடு எனத் தொடங்கும் பொதுத் திருப்புகழில் "வேதாகமங்களும் மதித்த சேவக" என்றும், தோலெலும்பு எனத் தொடங்கும் உத்தரமேரூர் திருப்புகழில் "ஆரணங்கள் ஆகமங்கள் புகழ் தாளும்" என்றும், ஆறுமாறும் அஞ்சுமஞ்சும் எனத் தொடங்கும் தேவனூர் திருப்புகழில் "ஆரணாகமங்கடந்த கலையான ஈறு கூறரு பெருஞ்சுவாமீ" என்றும், பொருளின் மேல் எனத் தொடங்கும் திருச்சிராப்பள்ளித் திருப்புகழில் "குருகடாக்ஷ கலா வேதாகம பரம வாக்கிய ஞானாசாரிய" என்றும் போற்றிப் பரவுகின்றார்.

ஆகமம் என்ற சொல்லுக்கு பல விளக்கங்கள் கூறுவர். அவற்றுள் பூரணஞானம் என்பதும் ஒன்றாகும். அதேபோல ஆகமங்களுக்கு சிவஞானம் என்றும் பெயர். இவ்விரண்டு கருத்தையும் இணைத்து ஆதிமகமாயி எனத் தொடங்கும் ஊதிமலைத் திருப்புகழில் "பூரண சிவாகமங்கள்" என்றும், தாரணிக்கு எனத் தொடங்கும் காசித் திருப்புகழில் "பூரணச் சிவஞான காவியம்" என்றும் ஆகமங்களை வருணிக்கிறார் நம் சுவாமிகள்.

அதேபோல, ஆகமங்களில் பலகலைகள் விளக்கப்படுவதால் உலக பசு பாச எனத் தொடங்கும் பழனித் திருப்புகழில் "பலகலை ஆகமங்கள் பயில்வோனே" என்றும், சிவபெருமானையே அவ்வருள்நூல் முழுமுதற்பொருளாகப் பேசுவதால், அவனிதனிலே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறந்து எனத் தொடங்கும் பழனித் திருப்புகழில் "சிவகலைகள் ஆகமங்கள்" என்றும், பெருமான் அருளிய இவ்வாகமங்கள் வேதத்தோடு முரணாகாத வைதிகசைவத்தைச் சார்ந்தவை என்பதால் மிகவும் அழகாக "சுருதி வழிமொழி சிவகலை" என்றும் வருணிக்கிறார்.

சிவபெருமான் உயிர்களின் மேன்மையைக் கருதியே வேத–சிவாகமங்களை அருளியிருக்கிறார். உயிர்களின் துன்பங்களைக் களைவதற்காகத் தான் அவை அருளப்பட்டன. பெறுதற்கரிய மனிதப் பிறவியில் பெறுதற்கரிதாகிய அப்பெரு நிலையை சுலபமாக அடைவதற்காகவே பெருமான் அவற்றை அருளியிருக்கிறார் என்ற கருத்துக்கள் சித்தாந்த சாத்திரங்களில் விரவிக் காணப்படுகின்றன.

"ஆரண ஆகமங்கள் அருளினால் உருவுகொண்டே
காரணன் அருளாணாகில் கதிப்பவர் இல்லையாகும்"

".....உயர் ஞானம் இரண்டாம் மாறா
மலமகல அகலாத மன்னுபோதத் திருவருள்
ஒன்று; ஒன்றதனைத் தெளிய ஓதும்
சிவாகமம் என உலகறியச் செப்பும் நூலே"

என்பன போன்ற பல அருள்வாக்குகள் வேதாகம வழியிலே தான் நாம் அப்பெருநிலையினை அடைய முடியும் என்று நமக்கு உறுதியாக உணர்த்தித் தெளிவிக்கின்றன.

அந்த பரமஞானத்தை அருளுமாறு அருணகிரிநாதப் பெருமானும் பல இடங்களில் "பலமாய வாதிற் பிறழாதே பதிஞான வாழ்வைத் தருவாயே" என்றும், "இருவினை மும்மலமும் அற இரவியொடு பிறவியற ஏகபோகமாய் நீயும் நானுமாய் பரமசுகம் அதனை அருள் ஏகநாயகா" என்று முருகப்பெருமானை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டுகிறார். விரிவஞ்சி இரண்டை மட்டும் குறிப்பிடுகிறேன். ஆனால் இதுபோன்ற வேண்டுதல்கள் நூற்றுக்கணக்காகத் திருப்புகழில் அமைந்துள்ளன.

இவ்வளவு சிறப்புவாய்ந்த சிவஞானமாகிய சிவாகமங்கள் காட்டுகின்ற அற்புதமான செந்நெறியைப் பயிலாமலும், இவ்வற்புத நெறியைக் கடைபிடிப்பவர்களோடு சேராமலும் என்னுடைய வாழ்நாளை நான் வீணாக்குகின்றேனே என்று நம்மேல் உள்ள குறையைத் தன்மேல் வைத்துப் பல பாடல்களில் பாடுகின்றார் கருணைக்கடலாகிய அருணகிரிப்பெருமான்.

மேலும், பல பாடல்களில் மிக உயர்ந்த நன்னெறிகளைத் தன்னகத்தே கொண்டதும் அருளாளர்கள் தங்கள் வழியாகக் கொண்டதுமாகிய வேதாகமங்களைப் தான் பயிலாது விட்டு விட்டேனே என்று கதறுகிறார் பெருமான். அது அவருக்காகப் பாடியதல்ல; நமக்காக.

அவனிதனிலே பிறந்து எனத் தொடங்கும் பழனித் திருப்புகழில் "சிவகலைகள் ஆகமங்கள் மிகவுமறை ஓதும் அன்பர் திருவடிகளே நினைந்து துதியாமல்" என்றும்,

மாலாசை கோபம் எனத் தொடங்கும் விராலிமலைத் திருப்புகழில், "நாலான வேதநூல் ஆகமாதி நானோதினேனும் இலை வீணே நாள் போய் விடாமல் ஆறாறு மீதில் ஞானோபதேசம் அருள்வாயே" என்றும்,

ஆதிமகமாயி எனத் தொடங்கும் ஊதிமலைத் திருப்புகழில் "பூதமதுவான ஐந்து பேதமிடவே அலைந்து பூரண சிவாகமங்கள் அறியாதே" என்றும் பாடுகிறார்.

தாரணிக்கதிபாவியாய் எனத் தொடங்கும் காசித் திருப்புகழில், வேதாகமங்களின் சாரமாக விளங்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமுறைகளை அருளிய அருளாளர்கள் அணிந்ததும், உண்மையை உணர்த்துவதுமாகிய திருநீற்றினை அணியாமல் தன் வாழ்நாட்களை கழித்திருக்கிறேனே என்ற கருத்தில் "பூரணச் சிவஞான காவியம் ஓது தற்புணர் வானநேயர்கள் பூசுமெய்த் திருநீரிடா இருவினையேனை" என்று பாடுகிறார்.

குருதி புலால் எனத் தொடங்கும் திருவானைக்காத் திருப்புகழில் வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள் ஆகியவற்றுள் பேசப்படுகின்ற சரியை, க்ரியை, யோகம், அடியார் வழிபாடு போன்ற எதையும் செய்யாமல் இருந்திருக்கிறேனே என்ற கருத்தில் "சுருதி புராணங்கள் ஆகமம் பகர் சரியை க்ரியாவண்டர் பூசை வந்தனை துதியொடு நாடும் தியானம் ஒன்றையும் முயலாதே" என்றும்,

பூசல் வந்திரு எனத் தொடங்கும் திருப்புகழில், "நாநா பேத அநேக தந்த்ர க்ரியா வேதாகம கலையாய ஆழியுங் கரை காணேன்" என்றும் பாடுகிறார்.

திருப்புகழ் திருத்தலங்கள் பலவற்றில் பல நபர்கள் வேதாகமங்களை ஓதி வழிபடுகிறார்கள் என்றும் வேதாகம வழியான வழிபாட்டு முறையே தொன்மைத் தமிழரின் உண்மையான வழிபாட்டுமுறை என்ற குறிப்புகளை, போக கற்பக் கடவுள் எனத் தொடங்கும் திருவருணைத் திருப்புகழில் "ஆகமப் பத்தரும் மற்று ஆரணச் சுத்தரும் முற்று ஆதரிக்கைக் கருணைத் துப்பு மதில் சூழும்" என்றும்,

நீள்புயற் குழல் மாதர் எனத் தொடங்கும் உத்தரமேரூர்த் திருப்புகழில் "ஆழியில் துயில்வோனும் மாமலர்ப் பிரமாவும் ஆகமப் பொருளோரும் அனைவோரும்" என்றும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாவை நாரிகள் எனத் தொடங்கும் திருக்கோவலூர் வீரட்டத் திருப்புகழில், "கோவதா மறையோர் மறையோதுமோதம் விழாவொலி கோடியாகம மாவொலி மிகவீறும் கோவை மாநகர் மேவிய வீரவேலாயுத கோதை யானையினோடமர் பெருமாளே" என்றும் பாடுகிறார்.

வேதாகமநெறியில் வழிபடுபவர்களின் இடர்களைக் களையவேண்டும் என்ற கருத்தில், வேலிரண்டு எனத் தொடங்கும் திருவாமாத்தூர்த் திருப்புகழில் ஆகமங்களை சிவபோகநனூல் என்று கூறி "வாழ்தருஞ் சிவபோக நனூல் நெறியே விரும்பி வினாவுடனே தொழ வாழ்வரந்தருவாயடியேனிடர் களைவாயே" என்றும்,

மனக்கவலையேதுமின்றி எனத் தொடங்கும் பழனித் திருப்புகழில் "வினைக்குரிய பாதகங்கள் துகைத்துவகையால் நினைந்து மிகுத்த பொருள் ஆகமங்கள் முறையாலே" என்றும்,

ஆதிமகமாயி எனத் தொடங்கும் ஊதிமலைத் திருப்புகழில் "ஓதுமறை ஆகமஞ்சொல் யோகமதுவே புரிந்து ஊழியுணர்வார்கள் தங்கள் வினைதீர" என்றும் பாடுகிறார்.

பெரியமடம் என்ற திருத்தலத்தின் கலகவிழி எனத் தொடங்கும் திருப்புகழில் மாயவலையில் சிக்கித் தவிக்கும் அடியேன் உண்மைநெறியில் நின்று உய்வுபெற பெருமானே நீ எனக்கு தீக்ஷை செய்துவைக்கவேண்டும் என்று கேட்கிறார். "நெறிநிற்க தீக்ஷை தரவேணும்" என்பது அவரது தருவாக்கு.

இதைத் தவிர பல இடங்களில் "வேதாகமக் கலை ரூபாள் முக்கணி", "ஆகமத்தி பலகாரணத்தி" "சகலாகமநூல் அறியாத பரதேவதையாள் தருசேயே" என்று அம்பிகையை ஆகமங்களின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலைவி என்று சொல்லி அத்தலைவியின் திருக்குமாரன் முருகப் பெருமான் என்றும் பாடுகிறார்.

முருகப்பெருமானே வேதாகமங்களைப் பயில்வதாக உலக பசுபாச எனத் தொடங்கும் பழனித் திருப்புகழில் "பலகலை சிவாகமங்கள் பயில்வோனே" என்றும்,

சீருலாவிய எனத் தொடங்கும் திருப்போரூர்த் திருப்புகழில், "ஆகம வேத புராண நூல் பல ஓதிய காரணா கருணாகர முருகோனே" எனவும் பாடுகிறார்.

"ஆராதனர் ஆடம்பரத்தும்" எனத்தொடங்கும் திருப்புகழில் க்ரியை நெறி வேதாகமாதி சாத்திரங்கள் ஆகியவற்றில் மருளாதே என்று அவற்றை வன்மையாகக் கண்டிக்கிறார்.

அதேபோல சிவாகமநெறியில் மிக முக்கியமாகப் பேசப்படுகின்ற ப்ராஸாத மந்த்ரங்கள், ஷடங்கமந்த்ரங்கள், ஈசானாதி பஞ்சப்ரஹ்ம மந்த்ரங்கள் ஆகியவற்றால் மட்டுமே அறிய முடியாதவன் பெருமான் என்பதை மகரகுண்டலமீதே எனத் தொடங்கும் திருவலஞ்சுழித் திருப்புகழில், "சிகரவம்பர்கள் பாகீராதிகள் பிரபை யொன்று பிராசாதாதிகள் சிவஷடங்கமொடு ஈசானாதிகள் சிவமோனர் தெளியுமந்த்ர கலாபா யோகிகள் அயல் விளங்கு சுவாமீ காமரு திருவலஞ்சுழி வாழ்வே தேவர்கள் பெருமாளே" என்று கூறுகிறார்.

சங்கைக்கத்தோடு எனத் தொடங்கும் பட்டாலியூர்த் திருப்புகழில், "சிவநூலின் மந்த்ர–ப்ரஸ்தார தரிசன யந்த்ரத்துக் கேள்வி அலமலம் வம்பிற் சுற்றாது பரகதி அருள்வாயே" என்று பாடுகிறார்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

சரியையாதி நாற்பாதங்களோடு இருபத்தெட்டு என்ற எண்ணிக்கையில் விளங்குகின்ற ஆகமநெறியே நாள்தோறும் நான் அனுட்டிப்பதும் உபதேசிப்பதுமாகிய நெறி என்பதைக் கூறும் "நாவேறு பாமணத்த பாதாரமே நினைத்து நாலாறு நாலு பற்றுவகையான நாலாரும் ஆகமத்தின் நூலாய ஞானமுத்தி நாடோரும் நானுரைத்த நெறியாக" என்ற சுவாமிமலைத் திருப்புகழோடு உற்றுநோக்கி நாம் ஆகமங்களின் பெருமையை உணரவேண்டும். அதாவது பெருமான் முன்னர்க் கண்டித்திருப்பது பக்தியில்லாமல் வெறும் ஆடம்பரத்திற்காக மட்டுமே செய்யப்படுகின்ற பூஜையைத் தானே தவிர ஆகமங்களை அவர் கண்டிக்கவில்லை என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

அதுமட்டுமல்ல, இறையனுபூதி வாசித்துக் காணொனாதது, பூசித்துக் கூடொணாதது என்று பாடிய நம் சுவாமிகள், அவ்வனுபூதி நிலையை சிவஞானம் சிறந்துவிளங்கும் தவத்தினர்கள் மட்டுமே அடைய முடியும் என்பதை, ஓலமறைகள் எனத் தொடங்கும் திருவானைக்காத் திருப்புகழில், "ஓலமறைகள் அறைகின்ற ஒன்றது, மேலைவெளியில் ஒளிரும் பரஞ்சுடர், ஓது சரியை க்ரியையும் புணர்ந்தவர் எவராலும் ஓதவரிய துரியங்கடந்தது, போத அருவ சுருபம் ப்ரபஞ்சமும் ஊனுமுயிரு முழுதுங் கலந்தது, சிவஞானம் சாலவுடைய தவர் கண்டு கொண்டது" என்று குறிப்பிடுகிறார்.

அதனால் வேதங்களின் ஸாரமாக விளங்குகின்ற சைவசித்தாந்த ஞானசாத்திரங்களாகிய சிவாகமங்களைத் தவிர மற்ற நூல்களையெல்லாம் படித்தது போதும் போதும் என்ற கருத்தில், குருது கிருமிகள் எனத் தொடங்கும் வயலூர்த் திருப்புகழில், "சுருதி வழிமொழி சிவகலை அலதினில் உலக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கலைகளும் அலம் அலம்" (அலம்=போதும்) என்று முருகப்பெருமானிடம் வேண்டுகிறார்.

இவை தவிர இன்னும் பல பாடல்களிலும், "வேதாகமச் சித்ர வேலாயுதன்" என்று கந்தரலங்காரத்திலும், "வேதாகமஞான விநோத மனோதீதா" என்று கந்தர் அனுபூதியிலும் முருகப்பெருமானைப் போற்றிப் பரவுகின்றார்.

"உருவேறவே ஜெபித்து ஒருகோடி ஓம சித்தி உடனாக ஆகமத்துகந்து பேணி" எனத் தொடங்கும் விராலிமலைத் திருப்புகழில், மந்த்ரசித்தி ஏற்படுமாறு இடையறாது ஜபம் செய்தும், ஒருகோடி ஆகுதி செய்து அதனால் சித்திபெற்றும், சிவாகமங்களை உவந்து விரும்பியும், யாரிடத்தும் ஆசை வைக்காமல், யோக நெறியில் ப்ரணவமந்த்ரத்தை ஜபித்து மனதை ஒருமுகப்படுத்தி வாழாமல் சிலர் குரு என்று வந்து செய்யும் உபதேசம் உபதேசமாக ஆகுமா? ஆகவே ஆகாது என்கிறார் சுவாமிகள்.

ஆனால் இன்றோ பலர் வேதாகமங்களே இல்லை என்றும், தான் அனைத்து ஆகமங்களையும் படித்திருக்கிறேன் என்றும், முன்னுக்குப் பின் முரணாகப் பேசிக் கொண்டும், எழுதிக் கொண்டும், குருவேடம் தரித்து உபதேசம் என்ற பெயரில் மக்களை ஏமாற்றுகின்ற கயவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களை சரியாக இனம்காண செந்தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமானே அருள்செய்யவேண்டும்.

மிகச்சிறந்ததாகிய சிவஞானநெறியினில் நம்மைப் பிறக்க வைத்து, அந்நெறியைப் பயிலவும், பின்பற்றவும் வாய்ப்பு அளித்திருக்கின்ற முருகப்பெருமானின் திருவடிமலர்களை வணங்கி சிவானுபூதிச் செல்வர், தவராஜயோகி தாயுமான சுவாமிகளின் அருட்பாடல்களில் ஆகமங்களைப் பற்றிச் சிந்திப்போம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீதாயுமான சுவாமிகள் திருவாக்கில் ஆகமங்கள்

வைதிகமாம் சைவ மவுனி மவுனத்தளித்த
மெய்திகழ்ந்தென் அல்லல் விடியுநாள் எந்நாளோ?

வைதிகசைவ நெறியுடைய மவுனகுரு, மவுனநிலையில் நின்று உணர்த்திய உண்மைப்பொருள் விளங்கித் துன்பம் ஒழியும் நாள் எந்நாளோ?

இப்பகுதியில் பாடல்களை அதிகப்படுத்தாது கருத்துக்களைச் சொல்லவேண்டும் என்று முயற்சித்தபோது, கருத்துக்களைச் சொல்வதை விட பாடல்களைப் படிக்கச் செய்தால் விளையும் பலன் அதிகம் என்று கருதி பாடல்களை அப்படியே பதிவு செய்திருக்கிறேன். வாசகர்கள் மன்னித்து அருளவேண்டும்.

திருமுறை ஆசிரியர்கள், அருணகிரிநாதர் முதலான அருளாளர்கள் வரிசையில் பதினேழாம் நூற்றாண்டில் அவதரித்து வைதிகசைவ சமயத்தின் அருமை பெருமைகளை தமது திருவாக்கின் மூலமும், அருட்செயல்களின் மூலமும் நிலைநாட்டியவர் சிவராஜயோகானுபூதிச் செல்வராகிய ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள்.

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவி தான் யாதினும் அரிது அரிது காண், இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ஏது வருமோ அறிகிலேன்" என்று சொல்லி நம்மை இப்பிறவியை முறையாகப் பயன்படுத்தத் தூண்டும் அருள்மொழிகளை அருளியவர் சுவாமிகள்.

ஸாமான்ய வைதிக மதங்களின் பெருமைகளைச் சொல்லி வைதிகசைவம் அம்மதங்களோடு எவ்வாறு இணைந்திருக்கிறது எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை அழகாகப் பட்டியலிட்டு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"தேவர்கள் முதலான அனைவரும் இந்நெறியில் நின்றே முத்தி சேர்ந்தார்கள்: என்றும்,

"எல்லாச் சமயங்களும் வணங்கும் இயல்புடையதாக சைவம் விளங்குகின்றது" என்றும், அதைச் "சோபானபக்ஷம்" (படிநிலைகள்) என்று சொல்லி, அதன்மேல் சைவம் விளங்கும் திறத்தை "மற்ற நூல்(களெல்லாம்) வணங்க, "மௌனமோலி அயர்வறச் சென்னியில் வைத்து ராஜாங்கத்தில் அமர்ந்தது வைதிகசைவம் அழகு இது அந்தோ!" என்றும்,

"அந்தோ! இது என்ன அதிசயம்! இந்தச் சமயம் போல் உலகில் வேறு ஒரு சமயமும் இல்லை", "சந்தானகற்பகம் போல் அருளைக் காட்டத் தக்கநெறி இந்நெறியே தான் சன்மார்க்கம்" என்றும் விளக்கும் பாங்கு சுவாமிகளின் எல்லையற்ற அறிவுக்குச் சான்றாக விளங்குகிறது. நம் சமயத்தின் பெருமைகளை விளக்கும் இப்பாடல்களை நாம் அனுதினமும் ஓதவேண்டும்.

அருள் பழுத்த பழச்சுவையே! கரும்பே! தேனே
ஆரமிர்தே! என்கண்ணே! அரியவான
பொருள் அனைத்தும் தரும்பொருளே! கருணை நீங்காப்
பூரணமாய் நின்ற ஒன்றே! புனிதவாழ்வே|
கருதரிய கருத்தின் உட் கருத்தாய் , மேவிக்
காலமும் தேசமும் வகுத்துக், கருவி யாதி
விரிவினையுங் கூட்டி உயிர்த் திரளை ஆட்டும்
விழுப்பொருளே! யான் சொல்லும் விண் ணப்பம் கேளே!

விண்ணவர் இந்திரன் முதலோர், நாரதாதி,
விளங்கு சுத்த ரிஷிகள், கன வீணை வல்லோர்,
எண்ணரிய சித்தர், மரு வாதி வேந்தர்
இருக்காதி மறை முனிவ ரெல்லாம் இந்தக்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண் அகல் ஞாலம் மதிக்கத் தானே உள்ளங்–
கையில் நெல்லிக் கனிபோலக் காட்சி யாகத்
திண்ணிய நல் லறிவால் இச் சமயத் தன்றோ
செப்பரிய சித்திமுத்தி சேர்ந்தார் என்றும்.

செப்பரிய சமயநெறி யெல்லாம் தந்தம்
தெய்வமே தெய்வமெனும் ; செயற்கையான
அப்பரிசா எரும் அஃதே பிடித்து அலிப்பால்
அடுத்தவ அந்நூல் களும் விரித்தே அநுமாநாதி
ஒப்ப வித் துரைப்பர்; இங்ஙன் பொய்மெய் யென்ன
ஒன்றிலை ஒன்றென பார்ப்பது ஒவ்வாதார்க்கும்;
இப்பரிசாம் சமயமுமாய் அல்ல வாகி,
யாது சம யமும் வணங்கும் இயல்ப தாகி.

இயல்பு என்றும் திரியாமல் இயமமாதி
எண்குணமும் காட்டி, அன்பால் இன்பமாகிப்
பயன் அருளப் பொருள்கள் பரிவார மாகிப்,
பண்புறவும் சோபான பக்ஷம் காட்டி,
மயலறு மந் திரம் சிக்ஷை சோதிடாதி
மற்று அங்க நூல்வணங்க, மௌந மோலி
அயர்வறச் சென் னியில் வைத்து ராஜாங் கத்தில்
அமர்ந்தது வைதிகசைவம் அழகிது அந்தோ!

அந்தோ ஈது அதிசயம் இச் சமயம் போல் –இன்(று)
அறிஞரெல்லாம் நடுவறிய அணிமா வாதி
வந்தாடித் திரிபவர்க்கும், பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கு, மற்று மற்றும்
இந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கும்,
இதுவன்றித் தாயகம் வேறில்லை இல்லை;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்தான கற்பகம்போல் அருளைக் காட்டத்
தக்கநெறி இந்நெறியே தான் சன் மார்க்கம்.

ஐவகை யெனும் பூதமாதியை வகுத்து எனத் தொடங்கும் பாடலில் "சைவமுதலாம் அளவில் சமயமும் வகுத்து" என்று சொல்லி சைவமே முதல் சமயம் என்பதை அழகாக விளக்குகிறார் நம் சுவாமிகள்.

உண்மை இதுவென சரியாக விளக்கமுடியாமல் பொய் சொல்லிப் பிதற்றும் மதங்கள் உலகில் பல இருக்கின்றன. அந்நெறிகளிலெல்லாம் செல்லாது உயர்தனிச் செந்நெறியாகியதும் சிவப்பரம்பொருளை விளக்கிக் காட்டுவதுமாகிய சைவசமயமே சமயம்.

அச்சமயம் காட்டும் சமயாதீதப் பழம்பொருளாகிய சிவபெருமானைக் காண்பதற்கும், திருவருளை அடைவதற்கு இதுவே தருணம் என்றும், பொங்கித் ததும்பும் அகண்டாகார சிவபோகம் எனும் பேரின்பவெள்ளத்தினை இந்த தேகம் விழும் முன் சேர்ந்து இன்புற்றிட "சேரவாரும் சகத்தீரே" என்று நம் அனைவரையும் அன்போடும் அக்கறையோடும் மீண்டும் மீண்டும் கூவிக்கூவி அழைக்கிறார் சுவாமிகள். வாருங்கள் அமுதமனைய அவரது திருவாக்கினைக் கேட்போம். படிப்போம். பருகுவோம்.

காடும் கரையும் மனக்குரங்கு
கால் விட்டோட, அதன்பிறகே
ஊடும் தொழிலால் பயனுளதோ?
ஒன்றாய்ப் பலவாய், உயிர்க்குயிராய்
ஆடும் கருணைப் பரஞ்சோதி
அருளைப் பெறுதற்கு அன்புநிலை

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேடும் பருவம் இது கண்டீர்!
சேர வாரும் சகத்தீரே !

சைவ சமய மேசமயம்:
சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளிக்
காட்டும், இந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலுஞ் சமயநெறி
புகுத வேண்டா(ம்) ; முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாரும் ! சகத்தீரே !

காகம் உறவு கலந்து உண்ணக்
கண்டீர்! அகண்டாகார சிவ–
போகம் எனும் பேரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குது ஐயோ!
இன்புற்றிட நாம் இனி எடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேரவாரும் சகத்தீரே!

வேதாகமங்களுக்குள் பேதமில்லை

வைதிகசைவ சமயத்தின் மூல இலக்கியங்கள் வேத–சிவாகமங்கள். அவை இரண்டாக இருந்தபோதிலும் பொருளுண்மை பற்றி அவற்றுள் பேதமில்லை என்பதை ஆசிரியர்கள் பலர் விளக்கியிருக்கின்றனர். அவற்றுள் "பெரியோர்க்கு அபேதமே" என்ற திருமூலர் வாக்கும், "வயந்து வேத–சிவாகமயோ: பேதம் ந பஶ்யாம:, வேத: அபி சிவாகம:,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காரணம் தத் கர்த்ருகத்வாத்" என்ற ஸ்ரீநீலகண்ட பாஷ்ய வசனமும் குறிப்பிடத்தக்கவை.

இக்கருத்தை திருமூலர் மரபில் வந்த தனது குருநாதர் மௌனகுருவை வணங்கும் (ஐந்துவகையாகின்ற பூதமும் எனத் தொடங்கும்) பாடலில்,

"வேதாகமத்துணி
பிரண்டில்லை யொன்'றென்னவே
வந்தகுருவே! வீறு சிவஞான சித்திநெறி
மௌனோப தேசகுருவே!
மந்த்ரகுருவே! யோக தந்த்ரகுருவே! மூலன்
மரபில்வரு மௌனகுருவே !

என அப்படியே மிக அழகாகப் பதிவு செய்திருக்கிறார் நம் சுவாமிகள். மரபின் பெருமைகளை உணர்ந்தவர்கள் தானே சொல்லமுடியும்.

வேதங்கள் = பாதை – ஆகமங்கள் = குதிரை

பொது சிறப்பு என வழங்கும் மேற்கூறிய இரண்டு நூல்களில் வேதம் பலபொருள்படத் தோன்றும் சூத்திரம் போலவும், ஆகமம் அதனைத் தெளிந்துரைக்கும் பாடியம் போலவும் கொள்ள வேண்டும் என்றே ஆசிரியப் பெருமக்கள் விளக்கியிருக்கிறார்கள். நம் சுவாமிகள் புதிய ஒரு உவமையைக் கையாண்டு வேதாகமங்களின் பொது மற்றும் சிறப்புத் தன்மையை விளக்குகிறார்.

"ஆரண மார்க்கத்து ஆகம வாசி(ஜி)
அற்புதமாய் நடந்தருளும்" என்பது அப்பாடல்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதாவது: ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லவேண்டும் என்று விரும்புகின்ற ஒருவனுக்குச் செல்ல வேண்டிய பாதையும், செல்லும் விதமும் அவசியம். அதுபோல இறைவன் திருவடியாகிய மோக்ஷத்தை அடைய விரும்புபவர்களுக்கு, இறைவனே வழிகாட்டும் பாதை போல வேதங்களையும், பயணம் செய்ய உதவும் குதிரை போல ஆகமங்களையும் அருளியிருக்கிறான் என்பதை உவமையின் மூலம் விளக்குகிறார்.

வேதாகமங்கள் புருஷார்த்தங்களை அறிவிக்கின்றன

சமயநூல் கூறுகின்ற பொருள்களிலே நமக்கு ஐயம் ஏற்படும்பொழுது சமயநூல் வல்லவர்கள் அருளாளர்கள் அப்பொருளைப் பற்றி விளக்கியிருக்கிறார்களா? என்பதை ஆராய்ந்து நாம் முடிவு செய்யவேண்டும். அவ்வாறன்றி நம் அறிவை மட்டும் துணைக்கொண்டு அறிய முற்பட்டால் அது விபரீதமாகவே முடியும் என்பதற்கு ஒரு சான்று.

அதாவது இருக்கு முதலான வேதங்கள் நான்கு என்பது உலகில் மிக மிகப் பிரசித்தமான ஒன்று. ஆனால் மூடர்கள் சிலர் வேதங்களில் கூறப்படுகின்ற பொருள்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு எனும் புருஷார்த்தங்களே நான்குவேதங்கள் என்று கூறி அதற்குப் பொருந்தாத சில திருமுறை வரிகளைக் காட்டி தானும் மயக்குண்டு பிறரையும் மயக்கிவருகின்றனர் அம்மூடர்களாகிய போலிகள்.

உண்மை என்ன? என்பதை நம் சுவாமிகள் அழகாக விளக்குகிறார் பாருங்கள்.

"கைத்தலம் விளங்குமொரு நெல்லியங் கனியெனக்
கண்ட வேதாகமத்தின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காட்சி புருஷார்த்தம் அதின் மாட்சி பெறுமுத்தி"

அதாவது:– வேதாகமங்களைப் படித்தவர்களுக்கு, அவை கூறுகின்ற பொருள்கள் புருஷார்த்தம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும், அவற்றுள் சிறந்தது – முக்யமானது வீடுபேறு எனப்படும் முத்தியே என்கிறார் சுவாமிகள். எனவே வேதங்களால் கூறப்படும் பொருள்களையே வேதங்கள் என்று கூறுபவர்கள் உள்ளங்கை நெல்லிக்கனியையே விளங்கிக் கொள்ள இயலாதவர்கள் என்று விளங்கிக் கொள்ளவேண்டும்.

இதே விஷயத்தை மற்றொரு இடத்தில் விளக்குகிறார் நம் சுவாமிகள். அதாவது உணவுச்சாலையில் உண்பதற்குத் தேவையான அனைத்தும் இருப்பதைப்போல மனிதர்களுக்குத் தேவையான அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருஷார்த்தங்களும் வேதாகமங்களில் இருக்கின்றன. அவற்றுள் முக்ய புருஷார்த்தம் – முதன்மையானது வீடளிக்கும் ஞானநெறி என்கிறார். அப்பாடல்:

"போனகம் இருக்கின்ற சாலையிடை வேண்டுவ
புசித்தற்கு இருக்கும் அதுபோல்
புருஷர் பெறு தர்மாதி வேதமுடன் ஆகமம்
புகலும் அதினால் ஆம் பயன்
ஞானநெறி முக்யநெறி" –
என்பதாகும்.

வேதாகமங்கள் தானாக உண்மையை விளக்கவில்லை

சுவாமிகள் பல பாடல்களில் ஒரு கருத்தை வலியுறுத்துகிறார். அதாவது, வேதாகமங்களாகிய அருள்நூல்கள் உண்மைப்பொருள் இதுவென்று விளக்கிக் கூறுகின்றன என்பது

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

முற்றிலும் உண்மை. ஆனால் குருவருளின்றி அந்நூல்கள் தானாக உண்மையை விளக்கமாட்டா என்பதாகும்.

"ஆறறிவார் அந்த அகலமும் நீளமும்" என்றதும் "அண்ணல் அறைந்த அறிவறியாவிடின் எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே" என்றதுமாகிய திருமூலரின் வாக்கை மூலன் மரபில் வந்தவராகிய நம் சுவாமிகள் எப்படிப் பேசுகிறார் பார்ப்போமா!

சுருதியே! சிவாகமங்களே! உங்களால் சொல்லும்
ஒரு தனிப்பொருள் அளவை ஈது என்னவாயுண்டோ?
பொருதிரைக் கடல் நுண்மணல் எண்ணினும், புகலக்
கருத எட்டிடா நிறைபொருள் அளவை யார் காண்பார்?

வேதங்களே! சிவாகமங்களே! நீங்கள் அறிவிக்கின்ற தனிப்பொருள் இத்தன்மைத்தது என்று உங்களால் சொல்ல முடியுமா? முடியாது. மோதுகின்ற அலைகளை உடைய கடலில் உள்ள நுண்ணியமணலினை எண்ணினாலும் எண்ணலாம். ஆனால், வாக்கிற்கும் மனதுக்கும் எட்டாத நிறைபொருளாகிய இறைவனின் அளவை யார் காண்பார்?

ஆரணம் ஆகமம் எல்லாம் உரைத்த அருள் மௌனம்
காரணமூலம் கல்லாலடிக்கே உண்டு; காணப்பெற்றால்
பார் அணங்கோடு சுழல் நெஞ்சமாகிய பாதரசம்
மாரண மாய்விடும்; எண்சித்தி முத்தியும் வாய்த்திடுமே.

வேதங்கள், ஆகமங்கள் முதலான எல்லா கலைநூல்களையும் திருவாய் மலர்ந்தருளிய மூலகாரணன் கருணை நிறைந்த மோனமூர்த்தி. அப்பெருமான் கல்லாலமரத்தின் கீழ் உறைகின்றான். அவனைக் கண்டால், மண் – பெண் ஆகியவற்றின் மீது விருப்பம் கொண்டு அலையும் மனது அடங்கி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒழியும். அட்டமாசித்தியும், முத்தியும் கிடைக்கும். இக்கருத்தை ஆகமங்களும்

ப்ரமாணாமிததேஹாய நமஶ்ஶாந்தாய தேஜஸே!
ஸத்ஸம்வித்–காரணாதீத ஹாநாதாநாந்தராத்மனே !!

என்றும்

அவித்யா வ்யதிரிக்தாய வித்யாதேஹாய தே நம: !
ஸ்வப்ரமாணைககம்யாய ஸ்வப்ரகாசாய தே நம: !!

என்றும் பேசுகின்றன.

வேதாகமங்களின் கூற்றை உள்முகமாக ஆராய வேண்டும்

காலாதீதனாகிய இறைவன் அருளிய நூல்களை, புறத்தே ஆராயாது, அதாவது, அவை தோன்றிய காலம் எது? என்ன மொழியில் அவை அருளப்பட்டிருக்கவேண்டும்? இறைவன் ஏன் வடமொழியில் அருளினான்? அவனுக்குத் தமிழ் தெரியாதா? என்பது போன்ற குருட்டுத் தனமான, கிறுக்குத் தனமான, கோணங்கித் தனமான, ஆராய்ச்சிகளைப் புறந்தள்ளவேண்டும்.

பெருமான் அருளிய அந்நூல்கள் நம் ஆன்ம ஈடேற்றத்திற்கு என்ன சொல்கின்றன, அவற்றின் உண்மைப்பொருள் என்ன என்பதை உள்முகமாக ஆராய்ச்சி செய்யவேண்டும் என்ற கருத்தில்,

ஆரணங்கள் ஆகமங்கள் யாவுமே ஆனந்த
பூரணமே உண்மைப்பொருள் என்னும் – காரணத்தை
ஓராயோ? உள்ளுள்ளே உற்று உணர்ந்து அவ்வுண்மையினைப்
பாராயோ? நெஞ்சே! பகர்!

என்று நம்மை ஆராயத் தூண்டுகிறார்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவத்தோடு நிஷ்டை கூடும் வழியை சிவாகமமே சொல்லும்

வேதங்கள் சொன்னபடி பெருமானும் ஆன்மாவும் சித்து என்ற வகையில் ஒன்றானாலும், பெத்த தசையில் இரண்டாக விளங்கும் ஆன்மா முத்ததசையில் நிஷ்டை கூடும்போது ஒன்றாகிவிடும் என்ற விளக்கத்தை சிவாகமமே சொல்லும் என்பதினை நம் சுவாமிகள்.

அப்பொருளும் ஆன்மாவும், ஆரணநூல் சொன்னபடி
தப்பில்லாச் சித்தொன்றாம் சாதியினால்; – எப்படியும்
தேரில் துவிதம்; சிவாகமமே சொல்லும் நிட்டை
ஆகுமிடத்து அத்துவிதமாம். என்று பாடுகிறார்.

வேதாகமங்களின் உண்மையை உணர்ந்தவர் சிவானந்தம் அடைவர்

நமக்கு சிவானந்தமாகிய அனுபவம் ஏற்படுவதற்காகவே பெருமான் வேதாகமங்களை அருளி ஐந்தொழில்களையும் இயற்றுகின்றான். இக்கருத்தை விளக்கும் வேதாகமங்களைக் கற்று கேட்டுத் தெளிந்தார்க்கு நிலையான சிவானந்தம் விளையும் என்பதை அறுதியிட்டுக் கூறுகிறார் சுவாமிகள். இதோ பாடல்:

இருக்காதி மறைமுடிவும் சிவாகமமாதி
இதயமும் கை காட்டெனவே இதயத்துள்ளே
ஒருக்காலே உணர்ந்தவர்கட்கு எக்காலும் தான்
ஒழியாத இன்பவெள்ளம் உலவா நிற்கும்.

அகக்கண் இல்லாதவர்க்கு வேதாகமங்கள் விளங்கா

தேவையம்பதி எனும் திருவிராமேச்சுரத்து நாயகியாகிய பர்வதவர்த்தினித் தாயை மலைவளர்காதலி என்று புகழ்ந்து பல பாடல்கள் பாடுகிறார் சுவாமிகள். அவற்றுள் பூதமுதலாகவே எனத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொடங்கும் பாடலில், அகக்கண் கொண்டு காணாதவர்களுக்கு எட்டாதவள் அம்பிகை என்று பாடுகிறார். "முகத்தில் கண்கொண்டு காணும் மூடர்காள் அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்" என்ற மூலன் மரபில் வந்தவர் அல்லவா நம் சுவாமிகள். பாடல் வரிகள் இதோ:

"வேதமுதலான நல் ஆகமத் தன்மையை
விளக்கும் உட்கண்ணிலாதவர்க்கும்
மிக்க நன் மகிமையைக் கேளாத செவிடர்க்கும்
வீறுவாதம் புகலுவாய்
வாதநோயாளர்க்கும் எட்டாத முக்கண்ணுடை
மாமருந்துக்கு அமிர்தமே"

யோகத்தினால் விளையும் பயன்களில் மயங்கலாகாது

யோகப் பயிற்சியினால் சாதகனுக்குப் பல்வேறுவிதமான சித்திகள் ஏற்படும் என்றும், ஆனால், அதுபோன்ற சித்திகளில் மனதைச் செலுத்தாது சிவபெருமானிடம் மனது நிலை பெறுவதையே சாதகன் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும் என்றும் பல ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. சுவாமிகளும் யோகசாதனையால் ஏற்படும் சித்திகளைக் குறிப்பிட்டு, அந்த சித்தி களையெல்லாம் விட மேலானது சிந்தையை அடக்கி சும்மா இருத்தல் என்று ஆகமக் கருத்தினைப் பிழிந்து ரஸமாகப் பல பாடல்களில் தருகின்றார். அவற்றுள் ஒன்று "கந்துக மதக் கரியை வசமா நடத்தலாம்" எனத் தொடங்கும் பாடல்.

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்,
கரடிவெம் புலிவாயையும்
கட்டலாம்; ஒரு சிங்க முதுகின்மேற் கொள்ளலாம்;
கட்செவி யெடுத்தாட்டலாம்;

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்;
வேற்றொருவர் காணாம லுலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல்கொளலாம்;
சந்ததமு மிளமையோ டிருக்கலாம்; மற்றொரு
சரீரத்தி னும்புகுதலாம்;
சலமே னடக்கலாம் ; கனன்மே லிருக்கலாம்;
தன்னிகரில் சித்திபெறலாம்;
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது; சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
தேசோ மயானந்தமே!

இதேபோல மற்றொரு பாடலில் யோகநெறியைப் பின்பற்றி நான் ஞானநெறி அடைவனோ? என்று கேட்டு யோகத்தின் பயன் சிவஞானத்தைப் பெறுவதே என்று உணர்த்துகிறார் பெருமான்.

நியமலக்ஷணமும் இயம லக்ஷணமும்
ஆசனாதி வித பேதமும்
நெடிது உணர்ந்து இதயபத்மபீடமிசை
நின்று இலங்கும் அஜபாநலத்து
இயலறிந்து, வளர் மூல குண்டலியை
இனிது இறைஞ்சி, அவள் அருளினால்,
அல்லையற்று வளர் சோதி மூல அனல்
எங்கள் மோன மனு முறையிலே
வயமிகுந்து வரும் அமிர்த மண்டல
மதிக்குளே மதியை வைத்து, நான்
வாய் மடுத்து அமிர்தவாரியைப் பருகி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மன்னும் ஆரமிர்த வடிவமாய்ச்
செய மிகுந்து வரும் சித்த யோகநிலை
பெற்று, ஞானநெறி அடைவனோ?
தெரிவதற்கு அரிய பிரமமே! அமல
சிற்சுகோதய விலாசமே !

இவையன்றி பல இடங்களில் சிவாகமங்களின் சரியை முதலான பாதங்களைப் பற்றியும், சம்புபக்ஷம் – அணுபக்ஷம், தத்வ–தாத்துவிகங்கள் போன்ற சித்தாந்த விஷயங்களையும் குறிப்பிடுகிறார் சுவாமிகள்.

சரியை முதலான பாதங்கள் ஆகமங்களிலும் ஆகமசாரமான நூல்களிலும் படிநிலைகளாகக் குறிப்பிடப்படவில்லை.

க்ரியாபாதே து நிபுண: சர்யாபாதாநுவர்த்தக: !
யோகபாதக்ருதாப்யாஸ: ஜ்ஞானபாதானுரஞ்ஜக: !!

என்று சாதகனுக்கு நான்குபாதப் பயிற்சியும் ஒரே நேரத்தில் அவசியம் என்றே பேசுகின்றன. சித்தாந்த சாத்திரங்கள் அவற்றைத் தனித்த மார்க்கங்களாகப் பேசுகின்றன. ஆனால் சுவாமிகளோ மலரை உவமித்து,

விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய் கனி போல் அன்றோ பராபரமே

என்று பாடியிருக்கிறார்.

தீக்ஷை பெறுதல் என்பது நமது சமயத்தில் மிக முக்கியமான ஒன்று. சமயம், விசேஷம், நிர்வாணம் என தீக்ஷைகளை மூன்றாகப் பேசுவர். அவற்றுள் நிர்வாணதீக்ஷையை அத்வசுத்தி தீக்ஷை/ அத்வசோதனம் என்று கூறுவர். இக்கருத்தைச் சுவாமிகள்,

அத்துவா எல்லாம் அடங்கச் சோதித்தபடிச்
சித்துருவாய் நின்றார் தெளிவுறிவது எந்நாளோ?

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று அத்துவசோதனையாகிய தீக்ஷையினால் ஏற்படும் ஞானநிலை தனக்கு என்று வாய்க்குமோ என்று வினவுகிறார்.

பஞ்சசுத்தி

தீக்ஷைபெற்ற பிறகு பெருமானை முறையாக வழிபட விரும்புபவன் பஞ்சசுத்திகளைச் செய்தால் தான் பூஜை செய்யும் தகுதியைப் பெறுகிறான் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

"யோ வேத்தி பஞ்சசுத்திந்து ஸ பூஜாம் கர்தும் அர்ஹதி"

என்பது வசனம். அவை, ஆத்மசுத்தி, ஸ்தானசுத்தி, த்ரவ்யசுத்தி, மந்த்ரசுத்தி, லிங்கசுத்தி என்பனவாம். இவற்றின் முறைகளை சிவாகமங்கள் மிக மிக விரிவாகப் பேசுகின்றன.

மூலன் மரபில்வந்த மவுனகுருவினடத்தில் தீக்ஷைபெற்று சிவஞானசித்தி நெறியை மிகத் தீவிரமாக அனுஷ்டித்த நம் சுவாமிகள் பஞ்ச சுத்திகளைச் செய்து பெருமானைப் பலகாலும் பூஜித்திருக்கிறார் என்பதும் அதனால் அவருக்கு விளைந்த அனுபவங்கள் என்ன என்பதையும் அவரது வரலாற்றையும் பாடல்களையும் உணர்ந்து படிப்பவர்களுக்குத் தெளிவாக விளங்கும். அவ்வாறு சிவானந்த அனுபூதியில் திளைத்த நம் சுவாமிகள்

பஞ்சசுத்தி செய்து நின்னை பாவித்துப் பூஜை செய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே

என்று பாடியிருக்கிறார்.

தொடர்ந்து ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளின் திருவாக்கில் ஆகமங்களைப் பற்றிச் சிந்திப்போம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் திருவாக்கில் ஆகமங்கள்

அருளாளர்கள் திருவாக்கில் ஆகமங்களைக் கண்டு இன்புற்று வரும் நாம், அவ்வரிசையில் "சிவஞானநிதியாக" விளங்கும் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்துள்ள பிரபந்தங்களைக் காண்போம்.

ஐந்து வயது வரை வாய் பேசமுடியாமல் இருந்தவர் சுவாமிகள். ஆனால் முதலில் அவர் தொடங்கியது பேச்சல்ல. பாட்டு. அதுவும் ஞானப்பனுவல். சைவத்தின் திறம் முழுமையையும் அடக்கிய ஓர் சிவஞான அனுபவப் பனுவல். அது "கந்தர் கலி வெண்பா".

சைவத்தை "மறைமுடிவாம் சைவம்", "அருட்பெரும் சைவம்", "திவ்வியம் பழுத்த சைவ சித்தாந்தம்" என்றெல்லாம் போற்றிப் பாராட்டும் சுவாமிகள், சிவபெருமானை "வைதிகக் கூத்தன்" என்று போற்றுகிறார்.

சிவபெருமான் தனது ஐந்து முகங்களில் இருந்தே வேதங்களையும் சிவாகமங்களையும் அருளினார் என்பது நாம் அறிந்ததே. அக்கருத்தை அறுமுகச் சிவமாகிய முருகன் மீதேற்றி முருகப்பெருமானின் திருமுகத்திலிருந்தே அவை தோன்றின என்ற கருத்தில்,

> "வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
> முடிக்கும் கமலமுகமும்"
>
> – 44, க.க.வெ

என்பதாகப் பாடுகிறார்.

நம் கருமேனியைக் கழிக்கப் பெருமான் தன் கருணையினால் கொண்ட வடிவங்கள் பல. அவற்றை அருவம்,

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருவுருவம், உருவம் என மூன்றாகப் பேசுதல் மரபு. ஆனால் அவ்வடிவங்களெல்லாம் நம் உடல் போன்று மாயையின் காரணமாக வந்த வடிவமல்ல. அவை பெருமான் தானே கொண்ட மந்திர வடிவங்கள். அவ்வகையான மந்திரவடிவங்களை ஷடத்வமூர்த்தி, ஷடத்வவிக்ரஹம், மந்த்ரமூர்த்தி, மந்த்ரதனு: என்று ஆகமங்களும், அத்துவவடிவம், அத்துவமூர்த்தி என்று சிவஞான சித்தியார் போன்ற ஞானநூல்களும் பேசுகின்றன.

மாயையின் காரணமாகிய அத்துவாக்களால் ஆன வடிவத்தை எவ்வாறு மந்த்ரவடிவம், அருள்வடிவம் எனக் கூற இயலும் என்ற கேள்விக்கு, பெருமானின் மறைப்பாற்றல் அத்துவாக்களைக் கலந்து நிற்பதால் ஒன்றாகவும், பெருமான் அறிவு வடிவாகவும் அத்துவாக்கள் அறிவற்றனவாயும் இருப்பதால் அத்துவாக்களுக்கு வேறாகவும், தன் மறைப்பாற்றலின்வழி அவ்வத்துவாக்களைச் செயல்படுத்துவதால் அவற்றின் உடனாகவும் இருப்பார். தனது மறைப்பாற்றலின் வழி அவ்வத்துவாக்களை வியாபித்து அவைகளைச் செலுத்தும்போது அவர் எங்ஙனம் வியாபித்திருக்கிறார் என்பதை சைவாகமங்கள் ஷடத்வந்யாஸ விதியில் மிக மிக விரிவாக அணுவணுவாக விளக்குகின்றன.

சிவதீக்ஷா ப்ரகரணத்தில், தீக்ஷைக்காக அமைக்கப்படும் மண்டலத்தில் பெருமானை ஆவாஹநம் செய்வதற்கு எவ்வாறு த்யானிக்க வேண்டும் என்று கூறும்பொழுது கீழ்க்காணும் ச்லோகம் அமைந்திருக்கிறது.

ஶாந்த்யதீத கலா–மூர்தா[4], ஶாந்தி–வக்த்ரஸரோருஹம்/
வித்[3]யா–விதத வக்ஷோங்க[3]ம்', ப்ரதிஷ்டா[2]–கு[3]ஹ்யமண்ட[3]லம்//
நிவ்ரு'த்தி–ஜாநு–ஜங்கா[4]–அங்க்[4]ரிம்', பு[4]வநாத்[4]வ–தநூருஹம்/
வர்ண–த்வங்–மந்த்ர–ருதி[4]ரம்' பத[3]–மாம்'ஸ–ஸிராசிதம்//

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தத்வாஸ்தி[2]–மஜ்ஜா–ஶுக்லாதி[3]தா[4]தும்' ஸத்[3]போ[4]க[3]–மோக்ஷித[3]ம்/
ஶிவாந்த தத்வக[3]ர்பா[4]த்[4]வவ்யாபிநம்' ஸர்வதா[3] ஶிவம்//

– பக்–225, தீக்ஷா விதி, க்ரியாக்ரமத்யோதிகா, ப்ரபா வ்யாக்யா

சாந்த்யதீதகலை இறைவனது திருமுடியாகவும், ஶாந்தி கலையானது பெருமானது திருமுகத்தாமரையாகவும், வித்யாகலை அவரது மார்புப் பகுதியாகவும், ப்ரதிஷ்டா கலை நாபிப் பகுதியாகவும், நிவ்ருத்திகலை முழங்கால், குதிக்கால் போன்ற உறுப்புகளாகவும் திகழ்கின்றன. இது கலாத்வ வடிவம்.

அடுத்து புவனாத்வா. புவனங்கள் 224. அவை பெருமானின் உரோமங்களாகத் திகழ்கின்றன.

அடுத்து மந்த்ராத்வா. ஈசானம் முதலான 12 மந்த்ரங்கள் = மந்த்ராத்வா இறைவனின் தோலாக விளங்குகின்றன.

அடுத்து வர்ணாத்வா. 51 வர்ணங்கள் = எழுத்துக்கள் உதிரம்போல இருக்கின்றன.

அடுத்து பதாத்வா. 81 பதங்களால் ஆன பதாத்வாவானது மாம்ஸமாகவும், நாடிகளாகவும் நிற்கின்றன.

அடுத்து தத்வாத்வா. 36 தத்துவங்களால் ஆன தத்துவாத்வாவானது உடலினுள்ளே இருக்கக் கூடிய எலும்புகளாகவும், மஜ்ஜா – சுக்லம் முதலான தாதுக்களாகவும் விளங்குகிறது.

மேற்கூறிய அத்துவவடிவ தியானத்திலும் 11 மந்திரங்களும், 81 பதங்களும், 51 வர்ணங்களும், 224 புவனங்களும், 36 தத்துவங்களும், 5 கலைகளும் தனித்தனியே பெருமானுக்கு எந்தெந்த அவயவமாக எந்தெந்தப் பகுதியில் விளங்குகின்றன என்ற

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளக்கங்களைச் சிவாகமங்களையும் அதனைச் சார்ந்த பத்ததி நூல்களையும் தவிர வேறு எங்கும் காணமுடியாது.

இந்த ஷடத்வ மந்திர வடிவத்தை இயல்பாகவே தம்முள் முகிழ்த்த ஆகமஞானத்தின் விளக்கமாக கந்தர் கலி வெண்பாவில் சுவாமிகள் இவ்வாறு வர்ணிக்கிறார்;–

"மந்திரமே சோரியா, வான்பதமே மாமுடியாத்,
தொந்தமுறும் வன்னமே தொக்காகப், – பந்தனையால்
ஒத்த புவனத்து உருவே உரோமமாத்,
தத்துவங்க ளே–சத்த தாதுவா, – வைத்த
கலையே அவயவமாய்க் காட்டும் அத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய்"

– 60 –62, கந்தர் கலி வெண்பா

மந்திர அத்வா இரத்தமாகவும், பதாத்வா திருமுடியாகவும், வர்ணாத்வா தோலாகவும், புவனாத்வா உரோமமாகவும், தத்வாத்வா சப்ததாதுக்களாகவும், கலாத்வாவே அவயவங்களாகவும் விளங்கும் ஷடத்வவடிவாகிய பரம்பொருளே என்று போற்றுகிறார்.

சிவதீக்ஷையில் காணப்படும் ஷடத்வ–வடிவம் சுவாமிகள் கூறும் வடிவத்திற்கு மாறாகத் தோன்றுகிறதே! என்ற ஐயம் நமக்கு எழலாம். ஆனால் பெருமான் இதுபோன்று வடிவம் கொள்ளுதல் என்பது, பல சமயங்களில் பல நிலைகளில் ஏற்படுகிறது. மேற்கூறிய பேதமும் அவ்வகைப்பட்டதே என்று நாம் உய்த்துணர வேண்டும். அப்படியானால் சுவாமிகள் கூறும் ஷடத்வ–வடிவத்திற்குப் பிரமாணம் இருக்குமா என்று ஆராய்ந்தபோது ஸ்ரீமன் மகுடோத்தரம் எனும் ஆகமம் அவ்வடிவை விளக்கி இருக்கிறது என்பதைக் காணமுடிந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதோ மகுடாகமம் காட்டும் ஷடத்வ வடிவம்:–

வர்ணாத்[4]வா து த்வகா[3]தா[4]ரः பதா[3]த்[4]வா ச ஶிரஸ்ததா[2]/
தத்வாத்[4]வா ஹ்ரு'த[3]யஞ்சைவ ஶுக்ல–மஜ்ஜா–அஸ்தி[2]ரூபகம்//
மந்த்ராத்[4]வா ருதி[4]ராதா[4]ரः பு[4]வநாத்[4]வா து ரோமகம்/
கலாத்[4]வா சைவ ஸர்வாங்க[3]ம் இத்த[2]ம்' ஸாதா[3]க்[2]யரூபகம்//

ஷடத்வாக்களின் விரிவான விளக்கங்களை சித்தாந்த ஸாராவளி போன்ற நூல்களின் உரையில் காணலாம்.

தீக்ஷையை ஷடத்வசுத்தி என்றே ஆகமங்கள் பேசுகின்றன. அறுவகையான அத்வாக்களில் = வழிகளில் உயிர்களைச் செலுத்தி உயர்த்துவதே சிவதீக்ஷை. ஆனால் இன்றோ சிலர், வேதாகமாதி சிவசாத்திரங்களின் அறிவும் இல்லாமல், திருமுறைகள் – சித்தாந்த சாத்திரங்கள் போன்ற அருள்நூல்களில் தோய்வும் இல்லாமல், திருவடிதீக்ஷை என்ற பெயரில் சீடனது சிரத்தின்மீது தனது காலை வைத்துச் செய்யும் பித்தலாட்டப் போலிச் சடங்குகளையெல்லாம் காணும்போது, உண்மையை ஆராய்ந்து உணர்த்த எழுந்திரு சைவனே என்று ஒவ்வொரு சைவனையும் எழுப்பவேண்டியநிலையில் நாம் இருக்கின்றோமோ என்று எண்ணத்தோன்றுகிறது.

காரணம் பற்றி ஒரு முக்கியமான கருத்தை இங்கே பதிவு செய்ய விழைகிறேன். ஷடத்வாக்களைப் பற்றிய அறிவு என்பது சைவசித்தாந்தம் பயில்பவர்களுக்கு மிக மிக இன்றியமையாத ஒன்று. ஷடத்வஞானம் கைவரப்பெற்ற ஒருவர் அருள்நூல்களாகிய திருமுறைகளைப் பயிலும்போது ஏற்படுகிற அனுபவம் வார்த்தைகளால் வர்ணிக்க இயலாத பரமசுகானுபவம்.

அதற்குச் சான்றாக "ஆகமநெறியில் அநந்தேசுவரர்" என்ற நூலில் ஆசிரியர், "சிவாகம–சில்பாகம கலாநிதி" "சிவஶ்ரீ

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸபாரத்தின சிவாசார்யர்" அவர்கள் பெரியபுராணப் பாடல் ஒன்றிற்குத் தரும் விளக்கம் அப்படியே:–

"எடுத்துக்காட்டாக ஒரு விளக்கம்:–

பல்லுயிரும் களிகூரத் தம்பாடல் பரமர்பால்
செல்லுமுறை பெறுதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து

– திருஞானசம்பந்தர் புராணம்

என்று கூறுகிறார் (ஆகமாந்தசாரமாகிய திருத்தொண்டர் புராண ஆசிரியர்) சேக்கிழார்.

பல்வகை உயிர்க் கூட்டங்களும் இன்பநிலையில் திளைத்து விளங்குவதற்காகத் தாம் பாடும் பாடல்கள் பெருமான் திருச்செவியை அடையவேண்டும் என்பதற்காகத் "தோடுடைய செவியன்" என, இறைவனின் செவியைச் சிறப்பித்துப் பாடினார் திருஞானசம்பந்தர். இதுதான் சேக்கிழார் தரும் விளக்கம். இந்த விளக்கத்தில் "பல்வகை உயிர்க்கூட்டங்கள்" "களிப்பு நிலை" "திருச்செவி" எனும் மூன்றன் இணக்கம் காணப்படுகிறது. இந்த இணக்கத்தில் காணப்படும் இறைவனின் அனுக்கிரக நிலையை நமக்குப் புலப்படுத்துவது பதாத்துவா. பதாத்துவா என்பதில் இடம்பெறும் எண்பத்தொரு பதங்களையும், வழிபாட்டு முறையில் நமது உடலில் நியாசம் செய்துகொள்ளும் பொழுது, இடது செவிக்குரிய பதமாக விளங்குவது "ஸர்வபூதஸுகப்ரத' என்பது. ஸர்வபூத = அனைத்து உயிர்களுக்கும் – அனைத்துப் பொருள்களுக்கும், ஸுகப்ரத = களிப்புநிலையை அருள்பவன்.

ஸர்வபூதஸுகப்ரதன் சிவபெருமான் என்பதால், பல்லுயிரும் களிகூர வேண்டிய, ஸர்வபூத ஸுகப்ரத என்னும் பதத்துக்கு உரியதான, தோடுடைய இடதுசெவியைச் சிறப்பித்துத் திருஞானசம்பந்தப் பெருமான் எடுத்த எடுப்பிலேயே பாடினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகம அமிழ்த ஊற்றுகளை அள்ளி அள்ளிப் பருகியவர் சேக்கிழார். அத்துவ ஞானம் அவருக்கு இயல்பிலேயே வாய்த்த ஒன்று. "அனைத்துயிர்க்கும் அருள்வழங்கும் அம்பிகையை நினைந்து தோடுடைய இடதுசெவியை முதலில் பாடினார்" என்றெல்லாம் விளக்கம் கூறாமல் "பல்லுயிரும் களிகூர, திருச்செவியைச் சிறப்பித்தார்" எனச் சேக்கிழார் கூறும் கூற்றின் உட்பொருளை அறுநெறிகளுள் ஒன்றாகிய சொல்நெறி (பதாத்துவா) நின்று, சாதனை நெறி மூலம் உணர்ந்துகொள்ளவேண்டும். ஷடத்துவ அனுபவரீதியாகத் திருமுறைகளைப் பயிலவேண்டும்." என்பது பேராசிரியர் முனைவர் S. P. சபாரத்தின சிவாசார்யர் அவர்களின் கூற்று. இவைகளையெல்லாம் அறியாமல் சைவசமயஞானமும், சைவசித்தாந்த ஞானமும் முழுமை பெறாது என்பதை சைவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். பிறர்க்கு உணர்த்த வேண்டும்.

சைவாகமங்கள் சரியை, க்ரியை, யோகம், ஞானம் என நாற்பாதப் பகுப்பினைக் கொண்டவை என்பது பிரசித்தம். தான் அந்நெறிகளையெல்லாம் பின்பற்றாதபோதிலும், நின் திருமன்ற நோக்கிப் பிறவா நன்னெறி பெற்றேன் என நடராசப் பெருமானைத் துதிக்கிறார் சுவாமிகள்.

"சரியையிற் சரியாது, கிரியையில் தளராது
யோகத் துணங்காது ஒண்பொருள் தூக்காது"
– பாடல் வரி – 7–8, பக்–386, சிதம்பரமும்மணிக்கோவை

பண்டாரமும்மணிக்கோவையில் தமது ஞானகுருநாதர் ஸ்ரீ–ல–ஸ்ரீ மாசிலாமணி தேசிகரைத் துதிக்கும் போது, பெருமானே! சரியை முதலியவற்றைச் செய் என்று என்னைப் பணித்து நீட்டிக்காமல் இப்பொழுதே எனக்கு அருள்புரிவாயாக என்று வேண்டுகின்றார்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

சத்திநி பாதநின் சந்நிதிப்பட்ட
இத்திறத் தெளிதினி லெய்திய தெனக்கே, அதனாற்
சரியையில் தாழ்க்கலை, கிரியையில் பணிக்கலை
யோகத் துய்க்கலை பாகமு நோக்கலை
நாளையின் றெனவொரு வேளையு நவிற்றலை
ஈண்டெனக் கருளுதி யிறைவ
பூண்டு கொண்டிருப்பனின் பொன்னடித் துணையே

– பாடல் வரி – 39–45, பக்–514, பண்டாரமும்மணிக்கோவை

ஞானசாத்திரமாகிய பண்டாரமும்மணிக்கோவையின் நிறைவில் சுவாமிகள் அவர்கள், தம் ஞானாசார்யப் பெருந்தகை ஸ்ரீ–ல–ஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகளுக்குக்குச் சாற்று வதற்காக இயற்றிய இப்பாமாலையே சரியை; அவர் தரிக்கும்படிச் சாற்றியதே கிரியை; இதனை அவர் ஏற்றுக்கொண்டு திருவருள் புரிந்ததே சிவயோகம்; அடியேனுக்கு அவர் வழங்கியதே ஞானமாகும் என்கிறார்.

தான் சரியை முதலான நன்னெறிகளை பின்பற்றவில்லை என்பதைக் முன்னர் குறிப்பிட்ட சுவாமிகள், அக்குறையை இங்கே மிக அழகாக நிறைவு செய்திருக்கிறார். இதனால் சரியை முதலான நெறிகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை சுவாமிகள் உணர்த்துகிறார் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

விரிக்குஞ் சரியையிப் பாமாலை சேர்ந்தது மெய்க்கிரியை
தரிக்கும் படிக்கின்று சாற்றிய தேமற்றேன் றண்டமிழைத்
தெரிக்கின்ற போதருள் செய்தது வே சிவ யோகமுண்மை
புரிக்கின்ற ஞானமொன் றே மாசி லாமணி பாலித்ததே.

– பாடல் எண் – 598, பக்–16 , பண்டாரமும்மணிக்கோவை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவர்களாகிய நாம் ஸ்ரீஞானசம்பந்தப் பெருமான், ஸ்ரீதிருநாவுக்கரசர் பெருமான், ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள், ஸ்ரீமணிவாசகப் பெருமான், ஸ்ரீதிருமூலர் பெருமான், ஸ்ரீநம்பியாண்டார் நம்பிகள், ஸ்ரீசேக்கிழார் பெருமான், ஸ்ரீஅருணகிரிநாதர், ஸ்ரீதாயுமான சுவாமிகள், ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் போன்ற அருளாளர்கள் வாக்கினை உணர்ந்து செந்நெறியில் ஒழுக இறைவன் நமக்கு அருள்பாலிக்க வேண்டும்.

அருளாளர்களது திருவாக்குகளில் இங்கே அடியேன் காட்டியிருப்பது ஒரு துளி மட்டுமே. இன்னும் எத்தனை எத்தனையோ பாடல்களில் வைதிகசைவத்தின் திறத்தை, சிவ ஆகமங்களின் மேன்மையை, வேதாகமவழிப்பட்ட சிவநெறியின் பெருமையைப் பாடியிருக்கிறார்கள் அருளாளர் பெருமக்கள். அவற்றையெல்லாம் பெரியோர்கள் வாயிலாகத் தெரிந்து கொள்வதும், மற்றவர்கள் தெரிந்துகொள்ளச் செய்வதும் நம் தலையாயப் பணிகளுள் ஒன்று.

தொடர்ந்து சித்தாந்த சாத்திரங்கள், பண்டார சாத்திரங்கள், பாம்பன் சுவாமிகளின் அருட்பாடல்கள், தலபுராணங்கள் ஆகியவற்றில் காணப்படும் ஆகமக் கருத்துக்களைச் சிந்திக்கக் கூடிய வாய்ப்பைப் பெருமான் அருளவேண்டும் என ப்ரார்த்திக்கிறேன்.

ஹரநம: பார்வதீ பதயே! ஹர ஹர மஹாதேவ!

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

"பழைய வைதிகசைவம் பரக்கவே"

திருச்சிற்றம்பலம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

திருச்சிற்றம்பலம்

ஆகமங்களைப் போற்றும் அருட்பாக்கள்

செந்துவ ராடையினா ருடைவிட்டு நின்றுழல்வார் சொன்ன
இந்திர ஞாலமொழிந் தின்புற வேண்டுதிரேல்
அந்தர மூவெயிலும் அரணம் மெரியூட்டி யாரூர்த்
தந்திர மாவுடையா னவனெந் தலைமையனே.

– 10, திருவாரூர், முதல்திருமுறை

ஆகமத்தொடு மந்திரங்க ளமைந்தசங்கத பங்கமாப்
பாகதத்தொ டிரைத்துரைத்த சனங்கள்வெட்குறு பக்கமா
மாகதக்கரி போற்றிரிந்து புரிந்துநின்றுணும் மாசுசேர்
ஆகதர்க்கெளி யேனலேன்திரு வாலவாயர னிற்கவே.

– 2, திருஆலவாய், மூன்றாம்திருமுறை

முன்னியாய் நின்ற முதல்வா போற்றி
மூவாத மேனி யுடையாய் போற்றி
என்னியா யெந்தை பிரானே போற்றி
யேழி னிசையே யுகப்பாய் போற்றி
மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமுந் தந்திரமு மானாய் போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

– 5, திருக்கயிலாயம், ஆறாம்திருமுறை

தாயவனை வானோர்க்கும் ஏனோ ருக்குந்
தலையவனை மலையவனை உலக மெல்லாம்
ஆயவனைச் சேயவனை அணியான் தன்னை
அழலவனை நிழலவனை அறிய வொண்ணா
மாயவனை மறையவனை மறையோர் தங்கள்
மந்திரனைத் தந்திரனை வளரா நின்ற
தீயவனைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேரோதார் நன்னெறிக்கண் சேரா தாரே

– 1, திருநாகேச்சரம், ஆறாம்திருமுறை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துறங்காட்டி யெல்லாம் விரித்தார் போலும்
தூமதியும் பாம்பு முடையார் போலும்
மறங்காட்டி மும்மதிலும் எய்தார் போலும்
மந்திரமுந் தந்திரமுந் தாமே போலும்
அறங்காட்டி அந்தணர்க்கன் றால நீழல்
அறமருளிச் செய்த அரனா ரிந்நாள்
புறங்காட் டெரியாடிப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே
– 3, கோயில், ஆறாம்திருமுறை

மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற தென்கொலோ என்று கூற
உங்கள்நா யகனார் முன்னம்உரைத்த ஆகம நூல் மண்மேல்
எங்குமில் லாத தொன்று கொடுவந்தேன் இயம்ப வென்றான்

பேறெனக் கிதன்மேல் உண்டோ பிரானருள் செய்த இந்த
மாறில்ஆ கமத்தை வாசித் தருள்செய வேண்டு மென்ன
நாறுபூங் கோதை மாதுந்தவிரவே நானும் நீயும்
வேறிடத் திருத்தல் வேண்டும் என்றவன் விளம்ப வேந்தன்
– 12,1 3, மெய்ப்பொருள்நாயனார் புராணம், 12ஆம் திருமுறை

எய்தியசீர் ஆகமத்தில் இயம்பியபூ சனைக்கேற்பக்
கொய்தமல ரும்புனலும் முதலான கொண்டணைந்தார்
மைதழையுங் கண்டத்து மலைமருந்தை வழிபாடு
செய்துவருந் தவமுடைய முனிவர்சிவ கோசரியார் 135

மாமுனிவர் நாள்தோறும் வந்தணைந்து வனவேந்தர்
தாமுயலும் பூசனைக்குச் சாலமிகத் தளர்வெய்தித்
தீமையென அதுநீக்கிச் செப்பிய ஆகமவிதியால்
ஆமுறையில் அருச்சனைசெய்தந்நெறியில் ஒழுகுவரால் 152

அந்நிலையில் அன்பனார் அறிந்தநெறி பூசிப்ப
மன்னியஆ கமப்படியால் மாமுனிவர் அருச்சித்திங்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

கென்னுடைய நாயகனே இதுசெய்தார் தமைக்காணேன்
உன்னுடைய திருவருளால் ஒழித்தருள வேண்டுமென 155

– கண்ணப்பநாயனார் புராணம், 12ஆம் திருமுறை

வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்
துள்ளு வார்புனல் வேணியார் அருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையின் ஆகமத் திறனெலாம் தெளிய
உள்ள வாறுகேட் டருளினாள் உலகையா ளுடையாள் 50

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள
அண்ண லார்தமை அர்ச்சனை புரியஆ தரித்தாள்
பெண்ணில் நல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து 51

ஏத மில்பல யோனிஎண் பத்து
நான்கு நூறாயி ரந்தனுள் வைத்த
பேத மும்புரந் தருளும்அக் கருணைப்
பிரான்மொ ழிந்தஆ கமவழி பேணிப்
போது நீர்மையில் தொழுதனள் போதப்
பொருப்பில் வேந்தனும் விருப்பில்வந் தெய்தி
மாத வம்புரிந் தருளுதற் கமைந்த
வளத்தொ டும்பரி சனங்களை விடுத்தான் 54

நங்கை உள்நிறை காதலை நோக்கி
நாய கன்திரு வுள்ளத்து மகிழ்ந்தே
அங்கண் எய்திய முறுவலுந் தோன்ற
அடுத்த தென்கொல்நின் பாலென வினவ
இங்கு நாதநீ மொழிந்தஆ கமத்தின்
இயல்பி னால்உனை அர்ச்சனை புரியப்
பொங்கு கின்றதென் னாசையென் றிறைஞ்சிப்
போக மார்த்தபூண் முலையினாள் போற்ற 52

உம்பர் நாயகர் பூசனைக் கவர்தாம்
உரைத்த ஆகமத் துண்மையே தலைநின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

றெம்பி ராட்டிஅர்ச் சனைபுரி வதனுக்
கியல்பில் வாழ்திருச் சேடிய ரான
கொம்பனார்கள்பூம் பிடகைகொண் டணையக்
குலவு மென்தளி ரடியிணை யொதுங்கி
அம்பி காவன மாந்திரு வனத்தி
லான தூநறும் புதுமலர் கொய்தாள் 59

கொய்த பன்மலர் கம்பைமா நதியில்
குலவு மஞ்சனம் நிலவுமெய்ப் பூச்சு
நெய்த ருங்கொழுந் தூபதீ பங்கள்
நிறைந்த சிந்தையில் நீடிய அன்பின்
மெய்த ரும்படி வேண்டின வெல்லாம்
வேண்டும் போதினில் உதவமெய்ப் பூசை
எய்த ஆகம விதியெலாம் செய்தாள்
உயிர்கள் யாவையும் ஈன்றவெம் பிராட்டி 60

கொந்தலர்பூங் குழல்இமயக் கொம்பு கம்பர்
கொள்ளும்பூ சனைகுறித்த தானங் காக்க
மந்திரமா மதிலகழி அவர்தாந் தந்த
வாய்மைஆ கமவிதியின் வகுப்புப் போலும்
அந்தமில்சீர்க் காஞ்சியைவந் தடைந்தார்க் கன்றி
அடைகளங்கம் அறுப்பரிதென் றறிந்து சூழ
வந்தணைந்து தன்கறுப்பும் உவர்ப்பும் நீக்கும்
மாகடலும் போலுமலர்க் கிடங்கு மாதோ 87

– திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணம், 12ஆம் திருமுறை

ஐந்து வருடம் அவர்க்கணைய அங்கம் ஆறும் உடன்நிறைந்த
சந்த மறைகள் உட்படமுன் தலைவர் மொழிந்த ஆகமங்கள்
முந்தையறிவின் தொடர்ச்சியினால் முகைக்கும் மலரின் வாசம்போல்
சிந்தை மலர உடன்மலரும் செவ்வி யுணர்வு சிறந்ததால் 13

பாவுங் கலைகள் ஆகமநூல் பரப்பின் தொகுதிப் பான்மையினால்
மேவும் பெருமை அருமறைகள் மூல மாக விளங்குலகில்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாவுந் தெளிந்த பொருளின்நிலையே எய்த உணர்ந்த உள்ளத்தால்
ஆவின் பெருமை உள்ளபடி அறிந்தார் ஆயற் கருள்செய்வார் 18

– சண்டேசுரநாயனார் புராணம், 12ஆம் திருமுறை

மெய்த்த ஆகம விதிவழி வேதகா ரணரை
நித்தல் பூசனை புரிந்தெழு நியமமுஞ் செய்தே
அத்தர் அன்பருக் கமுதுசெய்விப்பது முதலா
எத்தி றத்தன பணிகளும் ஏற்றெதிர் செய்வார் 6

– திருநீலநக்க நாயனார் புராணம், 12ஆம் திருமுறை

புந்தியினால் அவருரைத்த பொருளின் தன்மை
பொருளன்றாம் படியன்பர் பொருந்தக் கூற
மந்தவுணர் வுடையவரை நோக்கிச் சைவம்
அல்லாது மற்றொன்றும் இல்லை யென்றே
அந்தமில்சீர் மறைகள்ஆ கமங்கள் ஏனை
அகிலகலைப் பொருளுணர்ந்தார் அருளிச் செய்யச்
சிந்தையினில் அதுதெளிந்து புத்தர் சண்பைத்
திருமறையோர் சேவடிக்கீழ்ச் சென்று தாழ்ந்தார் 925

– திருஞானசம்பந்த நாயனார் புராணம், 12ஆம் திருமுறை

ஓதுசம யங்கள் பொருளுணரு நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசம யம்பொருள்நூல் யாதிங் கென்னில்
இதுவாகும் அதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினால் இவையெல்லாம் ஒரிடத்தே காண
நின்றதியா தொருசமயம் அதுசமயம் பொருள்நூல்
ஆதலினால் இவையெல்லாம் அருமறைஆ கமத்தே
அடங்கியிடும் அவையிரண்டும் அரனடிக்கீழ் அடங்கும் 13

– சுபக்கம், சிவஞானசித்தியார்

ஆரணம் ஆக மங்கள் அருளினால் உருவு கொண்டு
காரணன் அருளா னாகில் கதிப்பவ ரில்லை யாகும்
நாரணன் முதலா யுள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாம்
சீரணி குருசந் தானச் செய்தியும் சென்றி டாவே .

– சுபக்கம், சிவஞானசித்தியார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருமறையா கமமுதனூல் அனைத்தும்உரைக் கையினான்
அளப்பரிதாம் அப்பொருளை அரனருளால் அணுக்கள்
தருவர்கள்பின் தனித்தனியே தாமறிந்த அளவில்
தர்க்கமொடுத் தரங்களினாற் சமயம்சா தித்து
மிருதிபுரா ணம்கலைகள் மற்று மெல்லாம்
மெய்ந்நூலின் வழிபுடையாம் அங்கம்வே தாங்கம்
சுருதிசிவா கமம்ஒழியச் சொல்லுவதொன் றில்லை
சொல்லுவார்த மக்கறையோ சொல்லொ ணாதே

– சுபக்கம், சிவஞானசித்தியார்

உள்ளபடி இத்தை உரைக்கக்கேள் உன்றனக்கு
வள்ளல்அரு ளால்அன்று வாய்மலர்ந்து – தெள்ளியசீர்
ஆகமங்கள் சொன்ன அடைவிலே ஆனந்த
யோகம் நிகழ்புதல்வா உற்று. 3

– உண்மை விளக்கம்

ஆகமங்கள் எங்கே அறுசமயம் தானெங்கே
யோகங்க ளெங்கே உணர்வெங்கே – பாகத்(து)
அருள்வடிவுந் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு. 5

– திருக்களிற்றுப்படியார்

பலகலைஆ கமவேதம் யாவையினுங் கருத்துப்
பதிபசுபா சந்தெரித்தல் பதிபரமே அதுதான்
நிலவும்அரு உருவின்றிக் குணம்குறிக ளின்றி
நின்மலமாய் ஏகமாய் நித்த மாகி
அலகிலுயிர்க் குணர்வாகி அசல மாகி
அகண்டிதமாய் ஆநந்த உருவா யன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்து ளோரே

– சிவப்பிரகாசம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தென்சேரி மலை, ஸ்ரீவள்ளி தேவசேனா ஸமேத ஸ்ரீமுருகன் உற்சவமூர்த்தி எழில்மிகுத் தோற்றம்

தென்சேரி மலை திருக்கோயிலின் எழில்மிகுத் தோற்றம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy